குமரகுருபரன்



மலர் 14] 1963-௵ ஐப்பசி-௴ 1ம் ௳ (18-10-63) [இதழ் 10

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.
2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, காசி.
3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.
4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர்
அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக்
கல்லூரி, திருநெல்வேலி.
5. திரு. ஆ. சி. ஷண்முகநயினார் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.
6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை - 6.
7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமாரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 14 || சோபகிருது-௵ ஐப்பசித் திங்கள் 1-ம்௳ [18-10-63] || இதழ் 10

சிதம்பரச் செய்யுட் கோவை

முதுபெரும் புலவர்,

சீலத்திரு சிவஞானதேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

[கட்டுரை 73]

திருவருட் செல்வம் உண்டாகப் பெற்ருல், என்னதான் செய்ய முடியாது? எல்லாஞ் செய்யும் வல்லமை திருவருட்கே உண்டு. அத்தகைய எல்லாம் வல்ல திருவருள் உண்டாகப் பெற்ருல், பெற்றதற்கும் அவ்வல்லமை யெல்லாம் உளவாதலில் யாது வியப்புளது? அருளுருவும் குருவுருவும் வேறல்ல. 'குருவே சிவம்' என்பது திருமந்திரம். குருவின் பெருமையைச் சிவஞான போதம், சிவஞானசித்தியார் முதலிய அருள் நூல்கள் முடிவாகக் கொண்டு உணர்த்துகின்றன.

‘மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்த யோகத்தால்
மணியிரத குளிகையினுன் மற்றும் மற்றும்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்கள் திரிகால ஞானம்
அந்தம்இலா அணிமாதி ஞானங்கள் எல்லாம் அடைந்திடும்.’

[மணி; மந்திரம்; மருந்து; யோகம்; தந்திரம் (சாத்திர பேதங்கள்) கூறும்படி செய்யும் முறைகளால் வரும் அறிவும் வேதாகம ஞானங்களும்; முக்காலத்தறிவும் (திரிகால ஞானமும்); அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் எண்பெருஞ் சித்திகள் எல்லாவற்றுலும் எய்தும் அறிவும் குருவின் உதவி யில்லாமலே பெறலாம்] என்று கூறி, இவற்றுல் பெறலாகாத திருவடி ஞானம் (திருஞானம்) குருவருளால்தான் பெறத்தக்கது; வேறு எதனுலும் பெறமுடியாது; அக்குருவருள் உண்டேல், முற்கூறிய ‘மணி மந்திரம் மருந்து’ முதலிய வற்றுற் பெறத்தக்க அறிவையும் எளிதிற் பெறலாம் என்று சிவஞான சித்தியார் உணர்த்திற்று.

“ஆசான் அருளால் அடிசேர் ஞானம் வந்திடும் மற்றென்றுலும் வாராதாகும்; மற்று அவையும் (முற்கூறியவையும்) அவன் (அக்குருவின்) அருளான் மருவும்”. இது குருவருட் பெருமை. திருவருளும் குருவருளும் அபேதம் ஆயினும், திருவருள் இச்சா ஞானக் கிரியை மூன்றன் முழுமைக்கு இறைமை உடையது. குருவருள் அம் மூன்றனுள் இடைப்பட்ட ஞான முழுமைக்கே இறைமை யுடையது. உயிர்களது இச்சை முழுமைக்கும் கிரியை முழுமைக்கும் குருவருளை நாடுதல் குற்றம்தரும்.

‘இறைவனுவான் ஞானமெல்லாம் எல்லா முதன்மை அனுக்கிரகம் எல்லாம் இயல்புடையான்’ என்று, முழுமையவான இச்சா ஞானக் கிரியைகள் உடைமை இறைமைக்கு இலக்கணம் என்று கூறினர். அதை அடுத்து இறைவன்பால் அம்மூன்றும் முழுமையனவாக இருப்பதை எடுத்துக் காட்டுக்கள் ஆகத்தனித்தனி கூறினர். அவை இவை:-

1. 'இயம்பும் மறைகள் ஆகமங்களினுன் அறிவெல்லாம் (சர்வஞ்ஞத்துவம்) தோற்றும்.'

2. 'மரபின் வழி வருவோர்க்கும் வாராதோர்க்கும் முறைமையினுல் இன்பத்துன்பம் கொடுத்தலாலே முதன்மையெலாம் (சர்வ கர்த்ருத்வம்) அறிந்தும் (–அறிந்தோம்.)

3. "முயங்கு இரண்டு போகத் திறமதனுல் (சுகதுக்க போகாநுபவம் ஆன இருதிறத்தாலும்) வினை அறுக்குஞ் செய்தியாலே சேரும் அனுக்கிரக மெலாம் (அலுப்த சக்தி; குறைவிலாற்றல், வரம்பிலாற்றல்) காணுதும் (–காண்போம்). இம்முத்திறத்து முழுமையுமுடைய இறைமைக் குணங்கள் சிவபிரானுக்கு உள்ள என்று இம் மூவேறு இயல்பாற்றல்களால் நாம் அறியலாகின்றன. இங்கே திருவருட் பெருமையை உணர்கின்றேம்.

'ஆரியனும் ஆசான்வந்து அருளால் தோன்ற, அடி ஞானம் ஆன்மாவில் தோன்றும்' அன்றி, முழுஞானமும், முழுஇச்சையும், முழுஅனுக்கிரகமும் அக்குருவருளால் ஆன்மாவில் தோன்ரு. ஏன்? உயிர் வீடுபெற்ற காலத்தும் ஐந்தொழில் புரிதற்குரியன அல்ல.

" உம்பர்பிரான் உற்பத்தியா திகளுக்கு உரியன்
உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே."

மலம் நீங்கிய வழியும் சிவாநுபவம் ஒன்றற்கே சுதந்திரமாய உயிர் ஐந்தொழில் எல்லாவற்றிற்கும் சுதந்திரனுகிய முதல்வனேடு, ஒத்து ஒன்ருதல் செல்லாது என்றும் முழுவதும் சங்கரித்த வழி அவனெருவனே எஞ்சி நிற்றல் பெறப்படுதலானும் ஒடுங்கிய உலகங்கட்கு அவனே பெரிய தோராதாரம் ஆகலானும் ஒடுங்கிய உலகத்தைமீளத் தோற்றுதற்கும் நிறுத்துதற்கும் அவனே உரியன் என்றும் (54) சிவஞான மாமுனிவர் எழுதியருளிய உரையையும் ஈங்கு அறிதற்பாலது. உயிர்ப் பொருட்கே படைத்தல் முதலிய ஐந்தொழிற்குரிமை இல்லை என்பது இதுகாறும் எழுதியவற்ருல் அறியக் கிடந்தது. திருவருள்தான் ஐந்தொழிற்கும் உரிமையுடையது. குருவருள் அவற்றுள் அநுக்கிரகமாகிய ஒரு தொழிற்கே உரிமையுடையது. இவ்வுண்மையும் இதன் தொடக்கத்தில் உணர்த்தப்பட்டது.

படவே திருவருளைத் துணையாகக் கொண்டு ஐந்தொழிலையும் செய்யும் ஆற்றல் உயிர்ப்பொருளும் உயிரில் பொருளும் பெற லாம் என்பது எண்ணக் கிடந்தது. திருஞானசம்பந்தர் முதலிய அருட்சான்றோர் வழியாகத் திருவருளே ஐந்தொழில் புரிந்தது. நாயன்மார் அறுபத்து மூவருள் எல்லார்க்குமோ அவ்வாற்றல் இருந்தது? ஆய்ந்து பார்மின்! உயிர்ப் பொருட்கண் ஐந் தொழில் புரியும் மாற்றல் உண்மையை உணர்ந்தோம் இங்கு. உயிரில் பொருளிடத்தும் திருவருள் நின்று அவ்வைந்தொழில் புரிதல் உண்டு.

புராணங்கள் இவ்வுண்மையைத் தெளிவுறுத்துகின்றன. புராணங்களை மறந்ததால் தான் இந்நாடு இழிநிலையை எய் திற்று. உயிர்கள் கடவுளது உண்மையுருமயம் இன்பமே என்பதை உணர்ந்து, இன்பநினைவே கொண்டிருந்தால், துன்பம் சிறிதும் தொடரப்பெறாது இனிது வாழும். அதுவே கடவுள் வழிபாடு. கடவுளை மறந்தாரும், வேண்டாதாரும் மறுப்பாரும், வெறுப்பாரும் துன்பமே அடைவர். ஏன்? இன்பமயமான பொருளை உண்டு என்றுணர்ந்து வழிபடுவார்க்கு இன்பமும் இல்லை என்று சொல்லி வழிபடுவார் (–கெடுவார்)க்குத் துன்ப மும் உண்டாதல் கண்கூடு. நாத்திகருட் சிலர் மறைவில் கடவுள் வழிபாடும், வெளியில் நாத்திகர் வழிபாடும் உடைய வராயிருக்கின்றனர். உள்ளும் புறமும் ஒவ்வாதவர் என்று அவரை உலகம் இகழலாம். அவ்விகழ்ச்சி வேண்டா. கடவுளைத் தம் வாணிகப் பொருளாகக் கொண்டு நடாத்தும் ஆத்திகர்க்குள்ள பாவம் அவர்க்கு இல்லை. பெரிய கோயில்களை உற்று நோக்கி மகிழப் பெருஞ் செலவு செய்து சென்று கடவுளைக் கண்டு தொழ முடியாமல் வறிதே திரும்பும் ஆத்தி கர்க்கு அளவே இல்லை. அவ்வாறே, அவ்வாத்திகர் வழிபட்டு மகிழ்ந்து திரும்ப வழிசெய்யாது பொருளையே பொருட்படுத்தி, மக்கட்டன்மையே இன்றி, விலங்குகளைப் போல மதித்துத் துரத்தும் கொடுமை கோயில்களில் நிகழலாமா? இவ்வழியில் கோடிக் கணக்கில் வருவாய் வரினும் பயன் யாது? உலகஞானம் வளர்த்து வரத் தேவாலயம் துணைபுரிய வேண்டுமோ? நம் முன்னோர் அறியாத வழியைக் கண்டுபிடித்து விட்டதாகப் பெருமை யடித்துக் கொள்வதும் இவர்கட்கு இயல்பாயிற்று.

குற்றங்களைத் திருத்துதல் நன்று. பழைய குற்றங்களைத் தீர்க்க முயல்வதாகச் சொல்லிப் புதிய பெருங் குற்றங்களை உளவாக்குவதோ சீராக்கம்? இது சீராக்கம் ஆமோ? சீர்திருத்தம் என்று, தானே சொல்லிக் கொள்வதில் உண்மை வெளிப்படுகின்றது. சீரைத் திருத்திக் கேட்டைப் பெருக்குவதே சீர்திருத்தம் ஆகும். முன்னோர் நோக்கம் சிவ புண்ணியத்தில். இப்பின்னோர் நோக்கம் பசு புண்ணியத்தில். கோயில்கட்குள்ள வருவாய் சிவ புண்ணிய மார்க்கத்தில். அவ்வருவாயைச் செலவழித்தல் பசு புண்ணிய மார்க்கத்தில். இது அதி பாதகம் என்று (கச்சியப்ப முனிவர் முதலிய) அருட்சான்றோர்கள் விளக்கினார்கள். யார் அவற்றை யெல்லாம் அறிய அவாவுகின்றனர்?).

உயிரில் பொருள்களிடத்தும் திருவருள் நின்று செலுத்தினால், அவையும் ஐந்தொழில் புரியும் ஆற்றலைப் பெறும். இவ்வுண்மைக்கு எடுத்துக் காட்டாகச் சிற்சில வரலாறு கூறலாம். ஆயினும் ஒரு பாடலில் அவ்வுண்மையைத் தோற்றிக் காட்டிய ஆசிரியர் குமரகுருபர முனிவரரது மெய்ஞ்ஞானச் சிறப்பை உணரும் வண்ணம் செய்தல் வேண்டும். இதுவே இக்கட்டுரையின் உட்கோள். அப்பாடலை மட்டும் இதில் எழுதுகின்றோம்.

"கரும்பும் சுரும்பும் அரும்பும் பொரும்படைக் காமர்வில்வேள்
இரும்பும் கரைந்துரு கச்செய்யு மால்;இறும் பூதுஇதுஅன்றே!
விரும்பும் பெரும்புலி யூர்எம் பிரானருள் மேவில் ஒரு
துரும்பும் படைத்து அழிக்கும் அகிலாண்டத் தொகுதியையே."

இது சிதம்பரச் செய்யுட் கோவையில், ஒரு கட்டளைக் கலித்துறைப் பாடலுக்கு உதாரணமாக அமைந்திருப்பது. இதில் இட்ட கட்டளை, உயிர்ப்பொருளும் உயிரில் பொருளும் திருவருட் சார்புறல் வேண்டும் என்பது. இது மிக்க மறைவில் வைத்துணர்த்தும் கட்டளை. வெளிப்படை பொருள் புலவர்க்கெல்லாம் புலப்படும்.

கருவேள் (-மன்மதன்) உயிர்கட்கு விளையும் காமத்திற்கு அதிதேவதை. அக்காமத்தை வளர்க்குந் துணைப்பொருள்கள் அளவுட்படாதன. அவற்றுள் சிற்சிலவற்றை அவன் கருவிகளாக உருவகம் செய்யப்பட்டுள்ளன. அவை அவன் கருவிகள்

என்று உணரும் ஆற்றல் போகிகட்கே உண்டு. ஏனைப் போகிகட்கு அவன் கருவிகளினுல் விளையும் பயன்மட்டுமே தெரியும். காமனுக்கும் காமாட்சி யம்மைக்கும் கரும்புவில் முதலிய கருவிகளைத் தாங்கும் திறத்தில் ஒற்றுமை உண்டு. தணிகைப் புராணத்தில் அம்பிகை துதியை நோக்கி அறிக. 'சுருப்பு நாண் கருப்புவில் அருப்புக்கணை தூவ' என்பது 'மணிமேகலை' யடி. எதுகை நயம் அமைந்த அவ்வடியால், மன்மதனுடைய கரும்பு வில்லும், அதன் நாண் ஆகும் வண்டும், அந்நாணில் வைத்துத் தொடுக்கும் கணைகளாகிய அரும்பும் குறிக்கப்பட்டன.

அம்மணிமேகலையின் எதுகை நயத்தை அதில் உள்ள விகாரம் இன்றிக் குமரகுருபர சுவாமிகளும் 'கரும்பும் சுரும்பும் அரும்பும் பொரும்படை' என்று செவிக்கு இன்பம் உறமெல் லெழுத்தால் அமைந்த இயல்பை உள்ளவாறு காட்டியருளினுர்கள். அழகைப் பாட்டிலும் அமைத்துப் பாடும் எதுகையிலே விருப்பமும் ஆற்றலும் இயல்பாக வாய்ந்துள்ள மகளிருள் ஒருத்தி மற்றெருத்தியை நோக்கி, மணிமேகலையடியினும் இக் கோவைச் செய்யுளின் நாலடியினும் அமைந்த எதுகைநயம் மிக மேலடி என்று வியந்து பேச விளங்குகின்றது.

மங்கையர் மனம், அம்மனத்தின் நிலை, அந்நிலையின் விளைவு முதலியவற்றைக் குறித்து, அவற்றை விரும்பிய பாவலரும் விரும்பாத பாவலரும் தத்தம் பாடல்களில் நிரப்பிவைத்தனர் எத்தனையோ பொருட்கருத்துக்களை. பாவலருட் சக்கிரவர்த்தியாகிச் சிறந்து விளங்கிய கம்பர்,

"பங்கயத் தொருவனும் விடையின் பாகனும்
சங்குகைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லிபோல் அனைத்தும் நோக்கினும்
மங்கையர் மனநிலை உணர வல்லரோ?"

என்றருளினுர். இவ்வுண்மையை நல்ல கருத்தில் வைத்து, சீதைப் பிராட்டியின் வாய்மொழியாகத் தோற்றிய அக்கவிச் சக்கிரவர்த்திக்கு மகளிரினம் மறவாது நன்றி செலுத்தக்கடவது. அத்தகைய மனத்தை 'இரும்பு' என்பதும் கவிஞர்க்கு வழக்கம்.

"சிலையோ கரும்பு;பொரு கணையோ அரும்பு;"சிவ
சிவ" ஆவி ஒன்றும் உளதோ?
இலையோ? அறிந்திலம்;இம் மதன் ஆண்மை என்புகல்வ
திதுவே தவம்;பிறி தெனும்?
முலையே அணிந்தமுகிழ் நகையீர்!ஓர் பெண்கொடியின்
முலையோடு முன்கை வளையால்
மலையே குழைந்திடுதம் இருதோள் குழைந்துறைநம்
மதுரேசர் தந்த வரமே."

இது மதுரைக்கலம்பச் செய்யுள் (84). முன்னது மு(ல்)லை பின்னது வல்லை. திருக்கச்சியே கம்பன் வரலாறுள் கொங்கை யிணைத் தழும்பும் செங்கைவளைத் தழும்பும் உற்ற சரிதமும் ஒன்று. அதுவே மதுரேசர்க்கு அடையானது இச்சந்த விருத்தத் தில். இதில் 'சிவசிவ' என்றதையும் காஞ்சியிற் சிவஞானமா முனிவர், திருவுளம் குழைந்து, 'சிவசிவ' யாவரேயோ அவர் திறத்தகப்படாதார், என்றதையும் எண்ணிச் சிவனேயென இருத்தல் சிறந்தோர்க்கு இயல்பு. 'சிவசிவ' நச்சராவும் இலையோ, (சங்கரநயினர் கோயிலந்தாதி), என்றது ஒரு சிறு பிரபந்தம். மகளிர் மனத்தை 'இரும்பு' என்றே குறித்தருளினர் குமரகுருபர முனிவரர். திரிமூர்த்திகளாலும் உணரமுடியாதது மங்கையர் மனநிலை. மனத்தை அடக்கிவயப்படுத்திய ஆற்றல் மிக்க மகளிர்க்கும் ஆடவர்க்கும் பொதுவானது இப்பாடல்:–

"பரிந்தெனக்கோர் நன்மை பயப்பாய்போல் நெஞ்சே
அரிந்தென்னை ஆற்றவும் தின்னல் புரிந்துநீ
வேண்டுவ வேண்டுவேன் அல்லேன் விழுக்குணம்
பூண்டேன் பொறியிலி போ."

அம்மனத்தை யடக்குதலால் வரும் பயன் மிகப்பெரிது. அந் நன்மையினும் வேறு பெருநன்மை இல்லை. அதை யடக்காது அதற்கு அடங்கிய உயிரும் பிடிபட்ட களிறும் ஒன்று.

"தன்னைத்தான் நெஞ்சம் கரியாகத் தான்அடங்கின்
பின்னைத்தான் எய்தா நலன்இல்லை; தன்னைக்
குடிகெடுக்குந் தீநெஞ்சின் குற்றேவல் செய்தல்
பிடிபடுக்கப் பட்ட களிறு."

மனத்தை அடக்காதவர் காட்டிலிருந்தாலும் நடுநாட்டில் இருப்ப வரே. அடக்கியவர் நாட்டின் நடுவுள் வாழ்ந்தாலும் காட்டில் இருப்பவரே. மனத்தை வயப்படுத்தியவர் மேலுலகத்தின் கதவைத் திறக்குந் தாழ்க்கோலைக் கொண்டவராவர். மன வடக்கம் உற்றவனிலும் தெய்வம் வேறு இல்லை. இவ்வாறெல் லாம் நூல்கள் மனத்தைக் குறித்துப் பலபல சொல்கின்றன.

"நல்ல செய்து நரரை உயர்த்தவும்
அல்ல செய்து அங்கு அளற்றிடை ஆழ்ப்பவும்
வல்லது இந்த மனம் அலது.........
இல்லை."

என்றார் கற்பனைக் களஞ்சிய மாகிய கவிதாசார்வபௌமர். அம் மனம் இளகலும் முறுகலும் உடையது. முறுகிய நிலையில் கல்லும் இரும்பும் பிறகடும் பொருளும் ஒப்புரைக்கப்படும். இளகாதுறுதியுடைய மனம் இரும்பு போன்றது. இரும்பு போன்றதை இரும்பு என்றது உவமையாகு பெயர். பாவை போல்பவளைப் பாவை என்பது போல்வது அது.

அவ்விரும்பு மனத்தைக் கரைத்து விடுவானும் மன்மதன். அவன் ஆற்றலைத் தண்டியலங்காரத் துதாரணச் செய்யுள் ஒன்று,

"யானை இரதம் பரிஆள் இவை இல்லை;
தானும் அநங்கன்; தனுக் கரும்பு; தேனார்
மலர் ஐந்தால் வென்று வடுப்படுத்தான் மாரன்
உலகங்கள் மூன்றும் ஒருங்கு."

என்று கூறுகின்றது.

இவ்வகையில் ஆற்றல் சான்ற காமதேவன் இரும்பையும் கரைந்துருகச் செய்யும் திறம் மிக்க வியப்புடையது அன்று. அவனோ உயிரினன். உயிரே இல்லாத சிறுதுரும்பும், திரு வருளைப் பெறும் ஆயின், (அதாவது திருவருளால் இயக் கப்படுவதானால்) அண்டங்களின் எல்லாத் தொகுதியையும் படைத்தும் காத்தும் அழித்தும் வரும் முத்தொழில் வன்மையைப் பெறும். உயிருடையதல்லாத துரும்பிற்கும் திருவருட்டுணை

யால் முத்தொழில் செய்யும் ஆற்றல் உளதாகும். ஆதலின், மன்மதன், தலைவியின் இரும்புபோன்று உறுதிமிக்க நெஞ்சத்தைக்கரைந்து உருகச் செய்தலில் ஒருவியப்புமில்லை.

'விரும்பும் பெரும்புலியூர்' என்றது ஐந்தொழிலில் எத்தொழிலை விரும்புவாரும் தில்லைச் சிதம்பர நடனதரிசனம் எய்தி, தாம் விரும்பும் அத்தொழிலின் பயன் விளைந்து கைகூடப்பெறுவர் என்னுங் கருத்துடையது. சிவாநுக்கிரகத்தையே (ஐந்தாவது தொழிலையே) விரும்புவார் ஞானியார். 'ஆடஎடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே' என்று பாடவிரும்புவர் அவர். பயம்தீர விரும்புவர், அபயத் திருக்கையை நோக்கி 'என்று வந்தாய் என்னும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே என ஏத்தியின்புறுவர்.' இன்னோரன்ன பலவாறு விரும்புவர் இனிய அடியர்.

ஒரு துரும்பும் எம்பிரான் அருள்மேவில் அகிலாண்டத் தொகுதியைப் படைத்தழிக்கும் என்றுரைத்துக் கொள்க. காமர் வில்வேள் - காமம் மருவிய (வில்) வேள். காமர் வில் என்று கொண்டு; வில்லின் சிறப்பாகக் கூறலும் உரியதே. அக்காமனுக்கு ஒரு கரும்பு வில்லும் கரும்பு நாணும் அரும்பு அம்பும் துணைக்கொண்டு அவற்றைக் கையாண்டு, இரும்பையுருக்கினன். துரும்போ திருவருளைமட்டும் துணைக்கொண்டு முத்தொழில் புரியும் ஆற்றல் பெறலாவது என்றார் ஆசிரியர். கேநோபநிடதத்தின் பொருளை இங்கு நினைந்து போற்றுதல் கிளரொளி காட்டும்.

இக்கட்டுரையில் படிப்பவர்க்கு நலம் பயக்கும் என்று, புராணப் பெருமையும் மனத்தியல்பும் விரித்தெழுதப்பட்டன. சென்ற கட்டுரையில் எழுதிய பாடலில் 'யோகப் பயன்' என்ற பாடமும் உண்டு. தமிழ்த் தெய்வமாக விளங்கிய ஐயர் அவர்கள் பதிப்பில் உளது. அதற்குச் சாருப்பியம் தருதல் உரியது. ஆதலின், அதுவே சாலச் சிறந்த பாடம். அக்கட்டுரை எழுதும் போது அப்பதிப்பைக் கண்டு எழுத இயலாமற் போயிற்று.

(தொடரும்)

நீதிநெறி விளக்கம்

உரைநடையும், ஆங்கில மொழிபெயர்ப்பும்*

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

[மலர் 14. இதழ் 9-ன் தொடர்ச்சி]

பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்
குலமகளே ஏனையோர் செல்வம்—கலனழிந்த
கைம்மையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில்.

உயர்ந்தவர்கள் கையிலேயுள்ள செல்வப் பொருள், விலை மகளிரைப் போல எல்லார்க்கும் பயன்படுவதாகும். இடைப் பட்டவர்கள் கையிலே உள்ள செல்வம் குலமகளிரைப் போல உடையவர்களுக்கு மட்டும் பயன்படும். கடைப்பட்டவர்கள் கையிலே உள்ள செல்வம் மங்கல அணி இல்லாத கைம்மைப் பெண்களது நலத்தைப் போல எவருக்கும் பயன்படுவதில்லை.

Kinds of Wealth

The wealth of the eminently generous will be available to one and all like the charms of a prostitute; the wealth of the middling class will be useful only to its owner like the graces of a chaste wife; whereas the wealth of the misers will be of no use to any body like the beauty of the widows. 66

வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலும் நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான்.

---

* Translated by : Sri P. Mutharasu M. A., B. T., Head of the Tamil Department, Sri K. G. S. Arts College, Arulnandi Nagar.

கொடைத்தன்மை இல்லாதவனுடைய செல்வத்தைக் காட்டிலும் அதனை உடையவனது வறுமையே மிக நல்லதாகும். ஏனெனில் அந்த வறிஞன் அருளில்லாதவ னென்றும் அன்பில்லாதவனென்றும் கண்ணோட்ட மில்லாதவனென்றும் பலராலும் இகழப்பட மாட்டானாகையால்.

The miser's affluence

The poverty of a benevolent man is much better than the abundant wealth of a miser; for the former will never be reproached as being destitute of mercy, kindness and pity.. 67

ஈகை அரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல்
ஓஒ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்ப்பூட் டிடப்படின்மற்(று)
ஆ!ஆ! இவரென்செய் வார்.

ஒருவரிடத்துக் கொடுக்குஞ் செயல் அரியதாயிருந்தாலும் இன்சொற்களைச் சொல்லுவதிற்கூட வறியவரா யிருத்தல் அந்தோ! மிகவுங் கொடியது. இது ஆச்சரியம். நாக்கின் ஆற்றலை அடக்கித் தீவினையாகிய கம்மியனால் இவர்கள் வாய்ப் பூட்டு இடப்பெற்றார்களாயின் வேறு என்னசெய்ய வல்லவர்கள்?

The greatness of kind words

Even where a gift is impossible, it is most cruel to be devoid of kind words, but alas! what else can such people do, if their tongues are pierced through and mouths locked up by the smith of the evil deeds of a former life? 68

சொல்வன்மை உண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல—வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினும் அஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்.

ஒருவர் சொல்லும் சொல்லுக்கு வலிமை இருக்குமானால், அது கொண்டு ஒரு பயனையும் அடையாமல் கைவிட்டிருத்தல், நற்செயல்களை அழிப்பதினின்றும் வேருகமாட்டாது. விரைவில் தம்முடைய செல்வமனைத்தும் கெடுதற்குரிய செயல்கள் நிகழ்ந்தாலும், சொல்லின் பயனைக் கொள்பவர்கள் அதற்காக அஞ்சுவார்களோ?

The value of eloquence

The negligence of a person to avail himself of the power of eloquence, which he possesses, is nothing but an act of cutting at the root of good deeds. Will such people that have realised the best use of eloquence, fear and hesitate to speak, even at the risk of their prosperity? 69

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனில் தாழ்வரோ தாழார்—அறனல்ல
எண்மைய வாயினும் கைவிட் டரிதெனினும்
ஒண்மையின் தீர்ந்தொழுக லார்.

அறனல்லாத மறச்செயல்கள் செய்வதற்கு எளிமையுடையனவாக இருந்தாலும் அவற்றைக் கைவிட்டு விட்டுச் செய்வதற்கு அருமை உடையனவாக இருந்தாலும் அறநெறியிலிருந்து நீங்கி ஒழுகாத சான்றோர்கள், சிறிய முயற்சியைச் செய்து அதனல் பெரிய பயனை அடையக் கூடுமானல் அம் முயற்சியைச் செய்யத் தாமதிப்பார்களோ? தாமதிக்க மாட்டார்கள்.

Great advantage by a little exertion

Will those who stand steadfast in the path of virtue, however difficult it may be and abandon the unrighteous one, however alluring it may be, hesitate to attain much good by a little exertion? No. they will not.
70

———

(தொடரும்)

தேசீய கவியின் தீர்க்கதரிசனம்

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
சரபோசி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்.

எந்த மனிதனும் தன் எதிர்காலம் பற்றி எண்ணவே செய்கிறன்; வருங்காலத்தில் தன் வாழ்வு இப்படித்தான் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறன்; ஆசைப்படுகின்றன். இதனைத்தான் Ambition என்கிறோம். இது தனி மனிதன் (as an individual) என்ற முறையில் எழும் எண்ணம்; அறிவு மிக மிக, உணர்வு ஓங்க ஓங்க மாந்தன் தன்னைப் பற்றி நினைப்பதைக் கடந்து (as a man) சமுதாயம் பற்றியும் உலகு பற்றியும் எண்ணுகின்றன். கனவு காண்கிறன். எதிர் காலத்தில் உலகம் இப்படித்தான் இருக்கும்; வருங்காலத்தில் இவை எல்லாம் நடக்கும் எனத்திட்டமிட்டுக் கூறவும் செய்கிறன். H.G. வெல்ஸ் எனும் வரலாற்று வல்லுநர் The shape of things to come என்றும், டாக்டர் மு. வ. கி. பி. 2000 என்றும் எழுதியனவும் பிறவும் இங்கே குறிப்பிடலாம். கடந்த கால நிகழ்ச்சிகளை அளவு கோலாகக் கொண்டு நிகழ்காலப் போக்கினை அளந்து வருங்காலத்தைக் கணக்கிடும் முறையே இஃதெனலாம். History teaches us என்பதற்கேற்ப, வரலாறு உணர்த்தும் படிப்பினை கொண்டு தற்கால நடப்புக்களைப் பார்த்து எதிர்காலத்தில் இன்னவை நடக்கும் என உரைக்கின்றனர்.

இது போன்றே கவிஞர்களும் உள்ளத்து உணர்வின் உறைப்பால்-கவிதா சக்தியின் வலிமையாலே நாடும் நகரும் இங்ஙனம் அமைய வேண்டும் எனக் கனவு காண்கின்றனர்; கனவு நனவாதலும் உண்டு; இவற்றையே கவிகள் கண்ட கனவு என்கிறோம். நாம் காணுகின்ற கனவுக்கும்—எண்ணுகின்ற எண்ணத்திற்கும், கவிஞன் காண்கின்ற கனவுக்கும் நினைக்கின்ற நினைவுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. நமது எண்ணம்

குறுகியது, வரம்புடையது; கவிஞனின் எண்ணம் பரந்து பட்டது. வரம்பில்லாதது. ஆழ்ந்த நோக்குடையது அவனது பார்வை (Vision).

நமது எண்ணம் நாம் வாழும் சூழலைத் தாண்டாதது. நம் காலத்தைக் கடவாதது. கவியின் எண்ணமோ காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்பது; வாழும் காலத்தையும் வதியும் இடத்தையும் கடந்து செல்லும் ஆற்றலுடையது அவனது உள்ளம். அவன் உடல் மண்ணில் தோயினும், உள்ளம் விண்ணையும் சாடி வண்ணப் பறவையேபோல் உலவித் திரியும் ஒண்மையது. எனவே அவனுடைய சொல் காலம் பல கடந்து ஞாலம் அனைத்தும் நின்று நிலைக்கும் நிலைபேறு உடையது.

அவன் கடந்த காலமாம் தளத்தின் மீது நின்று, நிகழ் காலமாம் கண்கொண்டு எதிர்காலத்தை நோக்குகின்றான். அவனுடைய தொலைநோக்கு, பின்னர் நிகழ இருப்பதையும் இப்பொழுதே எடுத்தியம்புவதாய் அமைகின்றது. இதுபோன்ற ஏதுக்களால்தான் கவிஞரை, உலகினை உருவாக்கும் உயர் பேராளர் (Poets are the unacknowledged Legislators of the world) என்று உரைக்கின்றனர்.

இம்முறையில் கவிஞர்கள் எதிர்கால அமைப்பினை இப்பொழுதே எடுத்தியம்பும் சக்தி பெறுகின்றனர்; எனவே அவர்கள் வாக்கு தெய்வ வாக்காக அமைந்துவிடுகின்றது. இத்திறம் சான்றவராக நம் எட்டையபுரம் தந்த இன்தமிழ் ஏந்தல் அமைகின்றார். அவர் கூறுமாப் போல,

> ‘உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
> வாக்கினிலே ஒளியுண் டாகும்.’

உள்ளம் தூயதாக, விரிந்து பரந்ததாக மாசு மறுவற்றதாக அமையுமேல் அங்கே ஒளியுண்டாகும்; உள்ளத்தில் கோட்டமின்றேல், சொல்லிலும் கோட்டமின்மை அமையும் எனும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப (குறள்-119) உள்ளத்தின் ஒளி வாக்கினிலும் மிளிர்ந்திடக் காணலாம். அதிலும் பராசக்தியின் தண்ணருள் பெற்ற பாரதியின் நெஞ்சம் உண்மை ஒளிபெற்றதாகத்தானே இருக்கும்.

'பாட்டினிலே சொல்லுவதும் அவள் சொல்லாகும்
பயனின்றி யுரைப்பாளோ?'

என்ற பாரதியின் கூற்றுப்படி, சக்தி திகழும் அவரது வாயி னின்று வரும் வாக்கு ஒளியும் தெளிவும் உடையதாகத்தானே இருக்கும். எனவே தான் இருட் சூழலிலே காலமும் இடமும் கடந்த அவரது உண்மை யுள்ளம் உரைத்தவை பல இன்று உண்மையாகி வருதலைக் காண்கிறோம். இதனை யெல்லாம் காணும்போது முக்காலத்தையும் உணர்ந்தறியும் அவரது உள வலியும், அவரது உரையிலே அமையும் தீர்க்க தரிசனமும் அறிய முடிகிறது. இதனை நிலை நாட்டுவான் வேண்டி, சில பல சான்றுகள் செப்புவாம்.

'ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே!
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று (ஆடுவோமே!)'

எனப் பாடினார்.

விடுதலை பெறாத அந்நாளிலேயே அடைந்து விட்டதாகப் பாடும் ஆற்றல் பெற்றிருந்தார் அமரகவி; அல்ல, அடையப் போவது உறுதி யென்பதை இறந்த காலம் கொண்டு அறுதி யிடும் அளவிற்குத் தெளிவு பெற்றிருந்தார் என்றே செப்ப வேண்டும். அவர் அன்று பாடினார்; இன்று நாம் சுதந்திரம் பெற்றுளோம்; அவர் சொன்ன வண்ணம் ஆடுகின்றோம் – பாடு கின்றோம். இல்லையா?

'உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்'

"எல்லோரும் சமமென்ப துறுதி யாச்சு"

"நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்" – இது
நமக்கே யுரிமையா மென்ப தறிந்தோம்"

"இழிவு கொண்ட மனித ரென்ப
திந்தியாவில் இல்லையே!"

என்றெல்லாம் அன்று பாடினார்; இன்று இவை உண்மையாகி வருதல் உணரலாம். நாட்டிலே உழவும் தொழிலும் நலிந்து,

சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு பெருகி, நாமிருக்கும் நாடு நம தென்பது இல்லாதிருந்த சூழ்நிலையில் அகஒளி கொண்டு அமர கவி பாடினுன்; அப்படியே அனைத்தும் நடந்து வருகின்றன.

அண்ணல் காந்தி வாழ்ந்த நாளில் அவரை அறியாது, அவரது ஆன்ம பலம் உணராது எத்தனையோ பேர் ஏசினர். எள்ளி நகையாடினர். ஆனல் பாரதியோ அச்சாதாரண வடி வினுள் அசாதாரண சக்தி அமைந்திருப்பதை யுணர்ந்து, அவரை 'மகாத்துமா' என அழைத்து 'வாழ்க நீ எம்மான், நீ வாழ்க, வாழ்க!' என வாழ்த்தினுர். பின்னுளில் உலக உத்தம ராகவும், மகாத்துமாவாகவும் நாம் கண்டு போற்றிய காந்தியடி களை 1920க்கும் முன்பே தமது தீர்த்தமதி கொண்டு தெளிந்து,

"முடிவிலாக் கீர்த்தி பெற்ருய்!
புவிக்குளே முதன்மை யுற்ருய்!"

என வணங்கினுர். இன்ரே அனைத்துலகும் அண்ணல் காந்தியை எண்ணி மகிழ்கிறது; இந்த நாட்டிற்கு வருகை தருவோரெல் லாம் 'ராஜ்காட்'டிற்குச் சென்று அண்ணலுக்கு அஞ்சலி செய் கின்றனர். சாதாரணமானவராக அனைவராலுமே எண்ணப் பட்ட காந்தியின் அசாதாரண மாட்சியை முன்னரே உணர்ந்து போற்றிய பாரதியின் தீர்க்க தரிசனம்தான் என்னே!!

அதுபோன்றே காந்தியத்தைக் கண்டு ஏளனம் செய்தோர் எண்ணற்ருேர். அவரது அகிம்சை நெறி பலனளிக்காது, அவரது அமைதி முறை ஆக்கம் தராது – அதனுல் விடுதலை பெறவும் இயலாது; பிரெஞ்சுப் புரட்சி போன்றதொரு இரத்தப் புரட்சியே பயன் தரும் என்று நம்பினர் பலர். ஆனுல் காந்தீ யத்தால் வெற்றியுண்டென்பதை உணர்ந்த பாரதி,

காந்தி சொல் கேட்டார் காண்பார்
விடுதலை கணத்தினுள்ளே

என்று பாடினுர். இஃது உண்மை என்பதை நாமும் உணர்ந்து விட்டோம். எதிர்காலம் பற்றிப் பாரதி எண்ணிய இவ்வெண் ணம் அவரது முன்னுணர்வைக் காட்டுமாறறிக.

தமிழ் காத்தளித்த தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர், 'மகா மகோ உபாத்தியாயப்' பட்டம் பெற்றகாலை, அவரைப்

பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்!
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய்! அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்!
இறப்பின்றித் துலங்கு வாயே!

எனப் பாடினூர். அன்று பாடினூர் இதனை; நீலத்திரை கடல் நோக்கி நிற்குமாறு, மாநிலக் கல்லூரி முன் உ. வே. சா. வின் உருவச் சிலை சமைத்து இப்பாட்டையும் இன்று பொறித்துள்ளமை காணும்போது, பாரதியின் தீர்க்க தரிசனம் உண்மையாவது எண்ணி உளம் பூரிக்காமல் இருக்க இயலுமா என்ன?

இமயமலை ஏறிப்பார்க்கும் எண்ணம் 1920-ல்தான் தோன்றியது; 1953-ல் டென்சிங் நார்க்கே எவரெஸ்ட் பனிமலையின் உச்சியை அடைந்தார்; உலகே பாராட்டியது. இன்றும் அமெரிக்கரும், சுவிட்சர்லாந்தினரும் பிறரும் இத்துறையில் முயன்று வருகின்றனர். இத்தகு சாதனையை உலகம் செய்யும்-சிறப்பாக இந்தியா செய்யும் – செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார் இளசைக் கவி. எனவேதான்,

'வெள்ளிப் பனிமலை மீதுலாவுவோம்'

என்ருர். அன்று அவர் கூறியது இன்று மெய்யாகி வருதல் வரகவியின் வருபொருள் உணர்த்தும் பெருந்திறன் அறிந்து விம்மிதம் எய்துகின்ருேம்.

'சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்'

எனக் கனவுகண்டார்; இன்று இது நனவாகி வருதலை நாமறிவோம். இப்பொழுது புதிதாக வந்த பௌதிக விந்தைகளை – அறிவியல் ஆக்கங்களை அப்பொழுதே பாடிவிட்டார் பாரதி.

'காசி நகர்ப் புலவர் பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற் கோர் கருவி செய்வோம்'

என வானொலியை நம்மவர் அறியு முன்னரே ஆசைபற்றி அறையலுற்ருர். அஃது உண்மையாயிற்று.

பெண்மையின் தாழ்வினைக் கண்டு உளம் வெதும்பிய பாரதி, எதிர்காலத்தில் ஏந்திழையார் எய்தவிருக்கும் ஏற்றத்தை எய்தி விட்டதாகவே உறுதியுடன் பாடிவிட்டார்.

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்:
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.'

'விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவி லொழிப்பாராம்.'

என்று அன்று பாடினர்; இன்று அலுவலகம் முதல் அமைச் சரவைவரை பெண்கள் பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதுமாக இருக்கின்றனர். நீதிகள் செய்கின்றனர்; நற் கவிகளும் யாக்கின்றனர்; தொட்டிலை ஆட்டும் கை இன்று தொல்லுலகை ஆளும் கையாகவும் உளது. காவல் துறையிலும், தேசியப் போராட்டத்திலும், நாடு காத்தலிலும் பெண்கள் வகிக்கும் முக்கியத்துவம் காணும் போழ்து, பாரதியின் பெண்மை எண்ணம் உண்மை யாவதறிகிறோம். இன்னும்,

"முப்பது கோடி சனங்களின் சங்க
முழுமைக்கும் பொது வுடமை'
'எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்'

'தனி யொருவனுக் குணவில்லையெனில்—இந்த
சகத்தினை யழித் திடுவோம்'

என்பன போன்ற வற்றிலும் பாரதியின் தீர்க்க தரிசனம் அமைந் திருத்தலை யறியும்போது, அமரகவியின் கூர்த்த மதித்திறம் வியந்து செயல் மறந்து பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்

எனப் புலவனது புலமை நலத்தை சுட்டுவர் தொல்காப்பியர். அவ்வகையில், முக்காலமும் உணரும் ஒண்மையும் உள்ளொளி யும் பெற்றிருந்த உயர் பேர் கவிஞன் பாரதி, எதிரது உணர்த் தும் திறம் தெளிகிறோம்; தெளிந்த நாம் தேசியம் பாடவந்த தமிழ்க் கவியை - தேசியத் தமிழ்க் கவியை ஒரு தீர்க்க தரிசி என்று இயம்பாமல் இருக்க முடியுமா என்ன?

SAINT APPAR AND HIS HYMNS
அப்பர் சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
ஆங்கில மொழிபெயர்ப்பு

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Tiruvamur (South Arcot District) was a Saivite centre and there lived a couple, Pugazhanar and Mathiniyar. First a daughter, by name Tilakavatiyar was born of them. Then they were blessed with a boy. He was named Marulnikkiyar (one who dispels falsehood - agnana). Tilakavati's parents decided to marry her, when she came of age, to Kalippagaiyar a warrior by profession. He was also a devotee of Siva. And unfortunately before the marriage could take place, he was called to the front and he had to obey the royal command. Meanwhile Pugazhanar and Mathiniyar passed away. This was a shock to Tilakavati who had to shoulder the responsibility of bringing up her younger brother. A further shock awaited her. Kalippagaiyar met his end on the battle field. Tilakavati could not stand this triple shock and so wanted to put an end to her life. Marulnikki also wanted to die with his sister. Tilakavati was moved by this and changed her mind. Even though she was young, she led the life of an ascetic to bring up her brother.

Marulnikki, even while young, had realised the transitoriness of the world. He engaged himself in all kinds of charitable works. He was very e

to find out the best religion and to follow it. He had heard much about the jains of Pataliputra (modern, Triupathiripuliyur, South Arcot District) and their wonderful practice of Ahimsa. As Lord Siva had not bestowed on him, His grace, to sift and choose the best path, he believed that Jainism would give him emancipation and so became a convert. He mastered all the Jain Scriptures and won the respect of all. He was considered an authority on Janism. He came to be known as Dharmasena. His sister, Tilakavatiyar, could not do anything but to pray to Lord Siva to give her brother the good sense. By that time she had moved to Tiruvathigai (South Arcot District) and was taking part in the temple services.

Her prayer was answered and Dharmasena was afflicted with colic. No medicine could help him; nor could the mantras of the Jains. Dharmasena sent word to his sister and later on went himself to Tiruvathigai. Tilakavatiyar comforted him and gave him the sacred ash, chanting His name, "Namasivaya". She took him to the Siva temple of that town. Dharmasena writhing with pain, went round the temple and out of his physical pain was born a padigam (a decade - Ten verses). They reflected his repentence and entreated for forgiveness. With the last poem of the decade the pain disappeared. This padigam is included in the 4th Tirumurai, (Tirumurais are the Scriptures of the Saivites. They are twelve in number.) The padigams of Marulnikkiyar (for he ceased to be Dharmasena as soon as he was besmeared with the sacred ash) are found in the IV, V and VI Tirumurais.

Thus Marulnikkiyar was reclaimed to Saivism.

திருவதிகை வீரட்டானம் பண்–கொல்லி 4-ஆம் திருமுறை.

கூற்ருயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்ருயடிக் கேயிர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்ருதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேன்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.

"The pain is quite deadly and you remove not the same. O the Bull - rider, I will worship thee day and night but the intestines writhe and gripe and I can't bear. I implore Thee, the Lord of Tiruvathigai on the banks of the Kedila river."

By the Grace of the Lord the pain disappeared and the Voice of God gave him a new name, Tirunavukkarasu (the king of divine speech.)

(தொடரும்)

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

திரு. அருள் தியாகராசா அவர்கள்,
இலங்கை வானொலியின் பேச்சுத்துறைத் தலைவர்.

யான் சிறுவனாய், பள்ளிக்கூட மாணவனாய் இருந்த காலத்தில், என் ஆசிரியராகிய தந்தையார்,

“ அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையு நாட்டும்;—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.”

என்ற நீதிநெறி விளக்கச் செய்யுளைச் சொல்லித் தந்து, அதன் பொருளையும் விளக்கிக் காட்டினார். அதாவது கல்வியானது, அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருள் களையும் கொடுக்கும். வெளியில் புகழை உண்டாக்கும், கவலை வந்தவிடத்துத் துணைபுரியும். ஆனபடியால் கல்வியைக் காட்டி லும் இவ்வுலகில் ஒருவர்க்குச் சிறந்த பொருளில்லை யென்பதாம். இத்தகைய பெருமை வாய்ந்த நீதிநூலை அருளிச் செய்தவர் செந்தில் முருகன் திருவருளால், பாடுந்திறமை பெற்ற குமரகுருபர சுவாமிகள் ஆவர். அவருடைய நினைவு தினம் இன்றாகும்.

குமரகுருபர சுவாமிகள், செந்தில் முருகன் திருவருளால், உதித்தவர். இவரின் தந்தையார் பெயர் சண்முகசிகாமணிக் கவிராயர். தாயார் சிவகாமசுந்தரி அம்மையார். இவ்விருவரும் திருநெல்வேலியிலுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் வசித்து வருங் காலத்தில் தங்களுக்கு ஓர் ஆண் மகவு இல்லாமையை நினைந்து வருந்தித், தங்கள் குலதெய்வமாகிய திருச்செந்தூர் முருகப் பெருமானை வேண்டி அருந்தவங் கிடந்தனர். அத்தவத்தின்

10–6–63-ல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பியது. இ. வானொலி யின் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

பயனுக இவர்களுக்கு ஓர் ஆண் மகவு உதித்தது. அப்பிள்ளைக்குக் குமரகுருபரன் என்று பெயரிட்டழைத்தனர்.

குமரகுருபரர், ஐந்தாண்டுவரையும் பேச்சின்றி ஊமையாய் இருந்தனர். இதனைக் கண்ட இவரது பெற்றோர், மனங்கவன்று இப் பிள்ளையைச் செந்திலாண்டவன் சந்நிதிக்கு எடுத்துச் சென்று, அங்கே வளர்த்திவிட்டுத் தாமும் பாடுகிடந்தனர். நாற்பது நாட்களாக இவர்கள் அன்னுகாரமின்றித், தவங்கிடந்ததைக் கருணை வள்ளலாகிய முருகப்பெருமான் கண்டு மனமிரங்கி, குமரகுருபரருக்குப் பேசும் ஆற்றலையும் வாக்கு வன்மையையும் அருளினுர். இதனைக் கண்ட பெற்றோர்கள் நெஞ்சினில் உவகையெய்தி, முருகப்பெருமான் திருவருளை வழுத்தினர். குமரகுருபர சுவாமிகள், தமது ஐந்தாவது வயதிலேயே முருகப் பெருமான் மீது "கந்தர் கலிவெண்பா" என்ற நூலைப் பாடினுர். இந்நூல் 122 கண்ணிகளை யுடையது. இது ஒரு பாராயண நூலாகக் கருதப்பட்டு, ஆயிரக்கணக்கான முருக பக்தர்களால் நாடோறும் பாராயணம் பண்ணப்பட்டு வருகின்றது. இதனை ஒரு சைவ சித்தாந்தப் பேழை என்று அறிஞர் கூறுவர். 109 முதல் 122 வரை உள்ள கண்ணிகள் வேண்டுகோளாக அமைகின்றன. இவர் முருகப்பெருமானிடத்தில் எதை வேண்டினுர்?

—பல்விதமாம்

"ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை
எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்(து)—ஒழுக்கமுடன்
இம்மைப் பிறப்பில் இருவா தனைஅகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தமைவிடுத்(து)
ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின்(று) அருள்."

இதனைச் சற்று விளக்கிக் கூறினுல், குமரகுருபரர் தமக்கு, ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி, ஒரு சமயத்தில் எட்டுவகை விஞக்களுக்கு விடையளித்தல், எழுத்திலக்கணம்,

சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணி யிலக்கணம், ஆகியவற்றில் தோய்வு, பழுத்த தமிழ்ப்புலமை, அகப்பற்று, புறப்பற்றை நீக்குதல், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மல நீக்கம், நல்லொழுக்கம், நல்லாரிணக்கம் ஆகிய வற்றைத் தந்து, முருகப்பெருமானின் திருவடிகளையும் தர வேண்டுமென்று வேண்டுகின்றார். முருகப் பெருமான் இவைக ளெல்லாவற்றையும் வரையாது கொடுத்தார்.

குமரகுருபரர் இவைகளுடன் அமைதி பெறவில்லை. சிவத் தல யாத்திரை செய்ய விரும்பினார். பல திருப்பதிகளுக்குச் சென்று அம்மையப்பரை ஆராத காதலுடன் வணங்கினார். திக்கெலாம் புகழும் மதுரையிலும் சில காலம் தங்கியிருந்தார். அங்கே செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று, முடி புனைந்து செங்கோலோச்சிய மீனாட்சியம்மை மீது ஒரு பிள்ளைத் தமிழைப் பாடி, அக்காலத்தில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் முன்னிலையில் அதனை அரங்கேற்றினார்.

குமரகுருபரர்

“ தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே............”

என்ற வருகைப் பருவத்திலுள்ள பிள்ளைத் தமிழைப் பாடும்போது ஸ்ரீ மீனாட்சியம்மையே குழந்தையுருவில் வந்து கேட்டு மகிழ்ந் தனளென்றும், அரசன் கழுத்திலிருந்து முத்துமாலையைக் கழற்றிக் குமரகுருபர சுவாமிகளுக்கு அணிந்து விட்டு மறைந் தனளென்றும் கூறுவர். மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் இப் போதுள்ள பிள்ளைத் தமிழ் நூல்களுக்கெல்லாம் தலைமணியாகத் திகழ்வது. பத்துப் பருவங்களையும் நூறு பாக்களையு முடையது. சந்தச்சுவையும் இசையின்பமும் செறிந்தது. மீனாட்சி அம்மை

பிள்ளைத் தமிழைக் கேட்டுப் பரவசமடைந்த நாயக்கமன்னன், குமரகுருபரருக்குப் பலவகையான, சன்மானங்களையும், மானயங்களையும் கொடுத்து வழிபட்டான்.

ஒரு நாள் திருமலை நாயக்க மன்னன் உணவு அருந்த வேண்டிய காலத்தில் உணவு கொள்ளாமல் இருப்பதைக் கண்ட குமரகுருபரர்,

“ வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.”

என்ற குறளைக் கூறி அதன் கருத்தையும் விளக்கினுர். அதனைக் கேட்ட மன்னன் தான் அரசனுயிருக்கின்றபடியால், திருக்குறளைப் படிக்கப் போதிய அவகாசமில்லையென்று கூறி, அதன் சாரத்தைத் திரட்டி வகுத்து ஒரு நூல் செய்து தரும்படி வேண்டினுன். அவன் வேண்டுகோளுக்கிசைந்து குமரகுருபரர் “நீதிநெறி விளக்கம்” என்ற நீதி நூலை ஆக்கிக் கொடுத்தார். வெண்பா யாப்பால் ஆகிய இந்நூல் 102 பாடல்களை உடையது. நீதி நெறி விளக்கத்தை, “திருக்குறள் பருவத்தில் ஈன்ற பிள்ளை” யென்று வித்துவான் சி. தியாகராசச் செட்டியார் அவர்கள் கூறுவதுண்டு. உண்மையான கல்வி, உண்மையான நூல், அறம், பொருள், இன்பம் வீடு ஆகிய நான்கையும் கொடுக்கக் கூடியதாயிருக்கவேண்டு மென்று இந்நீதிநெறி விளக்கம் கூறுகின்றது. வேருெரு நூலைப் படிக்க வசதியில்லாதவர்கள் கூட “நீதிநெறி விளக்கம்” என்ற 102 செய்யுட்களைக் கொண்ட நூலைப்படிப்பதனுல் பெரும்பயனெய்தலாம். இதில் இரண்டு செய்யுட்களைப் பார்ப்போம் :-

“ பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு;—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.”

இதன் கருத்து என்னவெனில், பிறரால் பெருமதிப்பு வேண்டுபவர் மற்றவர்களின் சிறப்பை உலகறியச் சொல்லுதல் வேண்டும். அவர்களுடைய குறைபாட்டைத் தாம் அறிந்திருந்தாலும்

அவற்றை வெளியிடாமல் அடக்கி வைத்திருத்தல் வேண்டும். யாவரோடும் அன்பாய்ப் பழகுதல் வேண்டும் என்பதாம். இன்னுமொரு செய்யுளைப் பார்ப்போம்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்;—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணுயி னர்."

இச்செய்யுளில் தாம் மேற்கொண்ட முயற்சியில் ஊக்கமுடையாரது இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது. திருக்குறளிலுள்ள ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கணழியாமை என்ற நான்கு அதிகாரங்களிலுள்ள நாற்பது குறட்பாக்களின் சாரத்தைக் குமரகுருபரர் இச்செய்யுளில் வடித்தெடுத்துத் தந்திருக்கிருர். அதாவது கருமமே கண்ணுயினர். உடம்பின் வருத்தத்தைப் பாரார்! பசியைப் பற்றிச் சிந்தியார்! கண் துயிலார்! பிறர் செய்கின்ற இடையூறுகளைப் பொருட்படுத்தார்! காலத்தின் அருமையைப் பற்றியும் பாரார்! தமக்கு வருகின்ற அவமதிப்பையும் மனத்திற் கொள்ளார்! என்று அருளியிருத்தல் நாம் சிந்தித்து அவ்வண்ணம் ஒழுகுவதனுல் பயனடையலாம். நீதிநெறி விளக்கம் என்ற நூல் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

குமரகுருபர சுவாமிகள் மதுரையை விட்டு நீங்கிச் சோழ நாட்டிலுள்ள சிவத்தலங்களைத் தரிசிக்க வேண்டுமென்ற விருப்புடன் திருவாருருக்குச் சென்ருர். அங்கே தியாகராசப் பெருமானைத் தரிசித்துக்கொண்டு சிலகாலம் இருந்தார். அக்காலத்தில் திருவாரூர் நான்மணிமாலையென்ற பிரபந்தத்தை இயற்றினுர். இந்நூலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பொருட்டுத் திருவாரூர்த் தியாகராசப் பெருமான் நடுச்சாமத்தில் இரண்டு முறை தமது பாதங்கள் நோவப் பரவையாரிடம் தூது சென்றதை............

"நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தள்ளாக் காதல் தணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப

ஒருகா லல்ல விருகா னடந்தும்
எளியரி னெளிய ராயினர்
அளியர் போலு மன்பர்க டமக்கே"

என்ற அடிகளாற் சுவைபடக் கூறுகின்றார்.

குமரகுருபரர் சிவஞான உபதேசம் பெற வேண்டும் என்ற வேட்கையினால்; திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 4ம் பட்டத்தில் குருமூர்த்தியாய் விளங்கிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை நாடிச் சென்றார். அப்பெரியாரிடம் தமக்குத் துறவு நிலை அருளவேண்டுமென்று வேண்டினார். அங்ஙனம் செய்வ தற்கு முன் தலயாத்திரை செய்துவரும்படி பணித்தல் அவ் வாதீன மரபாதலின் அப்பெரியார் காசியாத்திரை செய்துவரும் படி கட்டளையிட்டார். காசிக்குச் சென்று வருதல் நெடுங் காலஞ் செல்லும் என்று குமரகுருபரர் கவன்றபோது, சிதம்பர வாசமேனும் செய்துவரும்படி தேசிகர் அவரைப் பணித்தார். தமது தேசிகரின் கட்டளையைச் சிரமேற்கொண்டு சிதம்பரத்துக் குச் செல்லும் வழியில் இவர் வைத்தீசுவரன் கோயிலில் தங்கினார். அங்கே கோயில் கொண்டருளியிருக்கும் செல்வமுத்துக்குமார சாமி மீது இவர் ஒரு பிள்ளைத் தமிழைப் பாடினார். இது "முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ்" என்று வழங்கப்பெறும். முருகனடி யார்கள் இதனை ஓர் பாராயண நூலாகக் கருதி ஓதுவார்கள். இதில் வேடர்கள் வாழ்கின்ற சிறிய ஊர்களும், செந்தினைப் புனமும் மலைசார்ந்த இடங்களும், முருகப்பெருமானுக்குச் சீதனக் காணியாகக் கொடுக்கப்பட்டதென்று வியப்புச் சுவைதோன்றக் கூறுகின்றார்.

வைத்தீசுவரன் கோவிலிலிருந்து, குமரகுருபரர், சிதம்பரம் சென்று ஸ்ரீமந் நடராசப்பெருமான்மீது, சிதம்பர மும்மணிக் கோவை பாடினார். இதில்:

"செல்வ மென்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவாவெனப் படுமே"

என்று செல்வத்திற்கும், வறுமைக்கும் வரைவிலக்கணம் கூறி யிருக்கிறார். சிதம்பரச் செய்யுட்கோவை என்ற நூலையும் இத்

தலத்தில் தான் இயற்றினுர். சிதம்பரத்தில் சிலகாலம் வாழ்ந்த குமரகுருபரர் மீண்டும் தமது ஞானதேசிகர்பாற் சென்று ஞானோபதேசமும் துறவும் பெற்ருர். அவர் மீது பண்டார மும்மணிக் கோவையென்ற பிரபந்த நூலை இயற்றினுர். பின் தேசிகரின் விடைபெற்றுக் காசிக்குச் சென்று தம்முடைய கல்வியறிவினுலும், தவப்பண்பினுலும் டில்லி மன்னனின் உள்ளத்தைக் கவர்ந்தார். சகல கலாவல்லி மாலையென்னும் பிரபந்தத்தைப் பாடிக் கலைமகள் திருவருளைப் பெற்ருர். அதன் பயனுக இந்துத்தானி மொழி கைவரப்பெற்ருர். சகல கலாவல்லிமாலையென்ற நூலை நவராத்திரி காலங்களில் தமிழ் நாட்டிலுள்ளவர்களும், இந் நாட்டிலுள்ளவர்களும் மிக்க பக்தியுடன் பாராயணம் செய்து வருவது வழக்கம். இவருக்கு டில்லி மன்னன் காசியில் கேதார கட்டத்தில் மடம் அமைப்பதற்கு நிலம் உதவினுர். அந்த மடம் குமாரசாமி மடம் என்று அழைக்கப்படும். கங்கைக் கரையிலுள்ள அம்மடம் இன்றும் சிறந்த முறையில் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் பரிபாலிக்கப்பட்டு வருவதை யான் சென்ற ஆண்டில் காசியில் தங்கி நின்றபோது அவதானித்தேன்.

குமரகுருபரர் பின்னுமொருமுறை தருமபுரம் வந்து ஞானுசிரியரைத் தரிசித்து மீண்டும் காசிக்குச் சென்று காசிக்கலம்பகம் என்னும் பிரபந்தத்தைப்பாடி இன்றைக்குச் சரியாக 275 ஆண்டுகட்கு முன்னர் காசியிலுள்ள கடவுண்மணியாகிய விசுவேசுவரப் பெருமானின் திருவடியை அடைந்தார். காசியிலுள்ள குமாரசாமி மடமும் திருப்பனந்தாளிலுள்ள ஸ்ரீ காசி மடமும் முறையே இவராலும் இவர் வழிவந்த ஸ்ரீ தில்லைநாயக சுவாமிகளாலும் நிறுவப்பட்டவை. குமரகுருபரர் கல்வியில் பெரு விருப்புடையவர் என்று முன்பே கூறினேன். அவரின் திருக்குறிப்பின்படி ஒழுகும் ஸ்ரீ காசிமடத்தின் இருபதாம் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள், தருமமே திருவுருவாக அவதரித்தவர். தமிழ்க் கல்வியையும், சைவ சித்தாந்தத்தையும், ஒல்லும் வாயெல்லாம் பரப்பி வருகின்ருர்கள். தமிழ் வழங்காத காசியிலுள்ள பல்கலைக் கழகத்தில் தமிழிற்கும், சைவ சித்தாந்தத்திற்கும் பீடம் அமைப்பதற்குத் தம்பிரான் சுவாமிகள் அவர்களே மூல காரணராயிருந்தவர். அலகாபாத், கல்கத்தா, முதலிய பல்கலைக்கழகங்களில் சைவ சித்தாந்த விரிவுரைகள்

ஆற்றவும், சைவ சித்தாந்தத்தைக் கற்பிக்கவும், ஆவன செய்துவரு கின்ருர். கேதாரம் முதல் கன்னியாகுமரியீருகவுள்ள பல சிவத் தலங்களில் அன்னம்பாலிப்பிற்காக மூலதனங்களை ஒதுக்கி இருக்கிருர். பல சிவத்தலங்களில் திருமுறைகளை ஓதவழிவகை களை வகுத்து வைத்திருக்கிருர். ஏழைகளுக்கு இலவச மருத்து வத்திற்காக நிதிஅமைத்துள்ளார்.

ஸ்ரீலஸ்ரீ அருணந்தி தம்பிரான் சுவாமிகளின் ஆணை வழி நின்ருெழுகும் ஸ்ரீவைகுண்டத்திலுள்ள திரு. டி. எம். குமர குருபரன் பிள்ளை பி. ஏ., பி. எல்., அவர்கள் குமரகுருபர சுவாமி கள் பிரபந்தங்களை அழகாகப் பதிப்பித்து எளிய விலைக்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்துவருகிருர்கள். மூவர் அருளிச் செய்த தேவாரங்களையும் தலமுறையின்படி பதிப்பித்து, சைவ மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கும் வண்ணம் தம்மால் ஆனதையெல்லாம் செய்கிருர். "குமரகுருபரன்" என்ற பொருள் பொதிந்த மாதசஞ்சிகையைப் பிரசுரித்து உலாவரச் செய்கின்ருர்கள்-

இன்று (10—6—63) மதுரையில் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசர் ஆலயத்தில் ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 275வது திருநாள் சிறந்த முறையில் கொண்டாடப்படும். திருமுறை ஓத இசை வாணர்கள் இன்று காலை 6-00 மணிதொடக்கம் நாளைக்காலை 6-00 மணிவரை தேவாரங்களைப் பாராயணம் செய்வார்கள்.

குமரகுருபரரின் பிரபந்தங்களைப் பயிலுவதால் சிறந்த தமிழ்ப்புலமையும், சைவசித்தாந்த நூலறிவும், சமயப் பற்றும், ஒருங்கு கைகூடும் என்பதில் ஐயமில்லை.

குமரகுருபர சுவாமிகள் புகழ் வாழ்க! வளர்க அவர் புகழ்!

திருவருட் பயன் – தெளிவுரை

பண்டித வித்துவான், சைவப் புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

(மலர் 14. இதழ் 9-இன் தொடர்ச்சி)

3. இருள்மல நிலை.

அஃதாவது ஆணவ மலத்தினது தன்மை. இதனைப் பாசநிலை என்றும் கூறுவர். இறை, உயிர், தளை என்ற மூன்றனுள் முன்னைய இரண்டினையும் முறையே முதலிரு அதிகாரங்களில் கூறிய ஆசிரியர், மூன்றும் முறைமைக் கண் நின்ற தளையை (பாசத்தை) இவ்வதிகாரத்திற் கூறுகின்றாராகலின் மேலையதனோடு இயைபுடைத்தாயிற்று.

உயிரின் அறிவை மறைத்து நிற்பது ஆணவ மலமாதலின் அதனை இருள் மலமென்றார். உயிரவை நிலை எனப் பொதுப்படக் கூறியது போல, பாசங்களின் நிலையெனப் பொதுப்படக் கூறாது இருள் மல நிலையென ஒன்றனையே விதந்து கூறினார் அதனது வன்மைபற்றி. எனினும் "ஒரு மொழி ஒழிதன் இனங் கொளற் குரித்தே" என்பதனால் ஏனைய கன்மம், மாயையும் கொள்ளப்படும்.

21. "துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும்
இன்(று)என்ப(து) எவ்வாறும் இல்."

(தெ-ரை) நெருங்கிய பிறவித் துன்பமும், வீடு பேறாகிய பேரின்பமும், இவ்விரண்டிற்கும் முறையே காரணமாகிய மலங்களும் இறைவனும் இல்பொருள்கள் என்று சொல்லுவது எவ்வாற்றாலும் பொருந்துவதன்றாம்.

பிறவித்துன்பத்திற்குக் காரணமாகிய மலங்களும், வீட்டின்பத்திற்குக் காரணமாகிய சிவமும், ஈண்டுத் துணைப் பொருள் எனப்பட்டது. துணை—காரணம்.

22. "இருளான(து) அன்றி இல(து)எவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்."

(தெ - ரை) உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும், அவற்றின் தன்மை தோன்றாமல் ஒரே பொருளாகத் தோன்றச் செய்யும் பொருள் இருளே அன்றி வேறில்லை. இதுவே இப் பாடலின் பொருளாம். இதுபோலவே ஆணவமாகிய இருளும், உயிர்கட்குப் பிறப்பு இறப்பின் துன்பத்தையும் வீடுபேற்றின் இன்பத்தையும் பகுத்தறிய இயலாதவாறு மறைக்கும் என்பது இதன் உட்கருத்தாம்.

ஒளி படைத்த கண்ணுடைய ஒருவனும், நள்ளிரவில் செல்வானாயின், எதிரில் நிற்கும் பொருளை அவ்விருளினால் அறிய இயலாதவாறு நிற்பன். அவ்விருள் நீக்கத்திற்கு ஏதுவான ஒளி கிடைப்பின், அவனே எதையும் அறியவல்லன் ஆகுவன். அதுபோல உயிரையும் ஆணவ மலம் மறைத்து நிற்கின்றபோது எதனையும் அறிய இயலாது; அது நீங்கின் எவற்றையும் அறிய இயலும். எவையும் ஏகப் பொருளாகி நிற்கும் பொருள் இருளானது அன்றி இலது எனக் கூட்டிப்பொருள் காண்க.

23. "ஒருபொருளும் காட்டா(து) இருள்உருவம் காட்டும்
இருபொருளும் காட்டா(து) இது."

(தெ - ரை) இருளானது பிற பொருள்களைக் காட்டாதாயினும் தன்னுடைய உருவத்தையேனும் காட்டும். ஆனால் இவ்வாணவ மலமோ பிறபொருள்களையும் காட்டாது; தன்னையும் காட்டாது என்பதாம்.

மேல் ஆணவமலத்தை இருளொடு ஒருவாற்றான் ஒப்புமை கூறிய ஆசிரியர் ஈண்டு அதனினும் கொடியது என அதன் உண்மை நிலையை விளக்குகின்றார்.

24. "அன்(று)அளவி உள்ஒளியோ(டு) ஆவி இடைஅடங்கி
இன்றளவும் நின்றது இருள்."

(தெ - ரை) ஆணவமானது அநாதியே உயிரோடு உள்ள தாய், அவ்வுயிர்க்குயிராகிய இறைவனும் அதனோடு நிற்க, அந்த இறைவனோடு சேராது உயிரையே சார்ந்து இன்றுவரையிலும் நின்று நிலைத்திருப்பதாகும்.

உள்ளொளி— உயிர்க்குயிராக இருக்கும் இறைவன்.

25. "பலரைப் புணர்ந்தும்இருட் பாவைக்(கு)உண்(டு) என்றும்
கணவற்கும் தோன்றாத கற்பு.

(தெ - ரை) எண்ணில்லாத உயிர்களைப் பொருந்திக் கலந்து நின்றும், ஆணவமாகிய பெண்ணுக்குத் தனது தலைவனாகிய உயிருக்கும் தன்னைக் காட்டாமலிருக்கும் நிலைமை உண்டு.

ஆணவம் என்ற ஒன்றே அனைத்துயிர்களையும் சேர்ந்து நிற்கின்றது. உயிர்கள் பலவாதல் போல ஆணவம் பலவன்று; ஒன்றேயாம். இங்ஙனம் அனைத்துயிர்களையும் சேர்ந்தும், அவ்வவ் உயிர்களுக்கும் தெரியாமல் மறைந்து நிற்கும் இயல்பு அதன்பால் உளது. இங்ஙனம் மறைந்து நிற்கும் ஆணவத்தைத் தலைவியாகவும், அது சேர்ந்து நிற்கும் உயிர்களைத் தலைவர்களாகவும் ஈண்டு உருவகித்துள்ளார்.

கற்புடைய நங்கையரெனின் பிறரிடத்துத் தம்முடைய உருவத்தைக் காட்டார்; ஆனால் தன் கணவனிடத்துக் காட்டுவர். ஆனால் ஈண்டு உருவகிக்கப்பட்ட ஆணவமாகிய கற்புடை நங்கையோ தன் கணவனிடத்தும் தன் உருவத்தைக் காட்டாமல் மறைந்தே உள்ளது; அன்றியும் பல உயிர்களையும் ஒருங்கு சேர்ந்துளது. அங்ஙனமாகவும் இதனைக் கற்புடை நங்கை என்றது அதனது இழிவு குறிக்கவேயாம்.



(இ-வ) பேராசிரியர் கே. சுவாமிநாதன், டாக்டர் திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன்.
(மத்திய உதவி கல்வி அமைச்சர்) அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம்.

தில்லித் தமிழ்ச் சங்கம், தமிழ் - பக்திப் பாடல்கள் இசை நிகழ்ச்சி. 1-9-63



இன்றைய சூழ்நிலைக்குப் பக்திப் பாடல்கள் அவசியமே

அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்,

புது டில்லி, செப். 2.

"தமிழ் பக்திப் பாடல்களைக் கேட்டு அனுபவிக்கும் சிறிது நேரத்தில் நாம் நம்மை மறந்து இசையிலும், தமிழ் தரும் இன்பத்திலும் ஈடுபட்டு ஒன்ற முடிகிறது. இன்றைய சூழ் நிலைக்கு இது போன்ற பக்திப் பாடல் நிகழ்ச்சிகள் மிகவும் அவசியமானவை." இவ்வாறு நேற்று மாலை தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற தமிழிசைக் கச்சேரிக்குத் தலைமைவகித்த மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் கூறினார். ஸ்ரீ காசிமடம் ஓதுவார் திரு. டி. எம். தண்டபாணியின் இசைத் தொண்டைப் பாராட்டி அவருடைய சேவை மேலும் சிறந்து வளர திரு. சுப்பிரமணியம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மத்திய அமைச்சர் டாக்டர் திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன், பேராசிரியர் சுவாமிநாதன், இசைப் பேராசிரியர் வி. வி. சடகோபன் ஆகியோர் வருகை புரிந்து சிறப்பித்தனர்.

சுமார் இரண்டேகால் மணிநேரம் சபையோரைப் பக்தி, இசை வெள்ளத்தில் திளைக்கச்செய்த திரு.தண்டபாணிக்கு உதவியாகத் தலைநகரின் சிறந்த இசைக் கலைஞர் திரு. சுப்புடு ஹார் மோனியமும், திருப்பழனம் மணி ஐயர் என்று அழைக்கப்படும் திருவையாறு திரு. சுப்பிரமணியம் மிருதங்கமும் வாசித்தனர்.

திரு. தண்டபாணி தமது இனிய, கம்பீரமான குரலில் தேவார, திருவாசகப் பாடல்களை மிகவும் அற்புதமாகப் பாடினார். அம்சத்வனி, கீர்வாணி, தர்மாவதி, தோடி ராகங்களைக் குறிப்பிடத்தக்க வகையில் இசைத்தார். தர்மாவதியில் அவர் பாடிய "குனித்த புருவமும்" என்ற பாடலும் இராகமாலிகையாக அவர் பாடிய "ஒருதரம் சரவணபவா" என்ற பாடலும் இசை நிகழ்ச்சியின் தனிச் சிறப்புக்குக் காரணமாக விளங்கின.

இது போன்ற இசை நிகழ்ச்சி தலைநகரின் ஒவ்வொரு பகுதியிலும் நடைபெற வேண்டுமென்று தலைநகர்த் தமிழன்பர்கள் அநேகர் தமது விருப்பத்தைத் தெரிவித்தனர்.

தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்யும் மூன்றாவது தமிழ் இசை நிகழ்ச்சி இது. இன்னும் மேன்மேலும் தமிழிசை நிகழ்ச்சிகள் சங்கத்தின் ஆதரவில் அடிக்கடி நடைபெறுமென்று சங்கச் செயலாளர் குறிப்பிட்டார்.

நன்றிக்குப் பின் நாட்டு வாழ்த்துடன் தமிழிசை நிகழ்ச்சி இனிது முடிந்தது.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 14, இதழ் 9-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPARSWAMI)

35. குலம்பொல்லேன்குணம்பொல்லேன்குறியும்பொல்லேன்
குற்றமேபெரிதுடையேன்கோலமாய
நலம்பொல்லேனுன்பொல்லேன்ஞானியல்லே
னல்லாரோடிசைந்திலேனடுவேனின்ற
விலங்கலேன்விலங்கலாதொழிந்தேனல்லேன்
வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லேன்
இலம்பொல்லேனிரப்பதல்லால்ஈயமாட்டே
னென்செய்வான்றேன்றினேனேழையேனே.

It would be hard to find a more comprehensive confession of sin than our next stanza from another hymn.

35. Evil, all evil, my race, evil my qualities all,
Great am I only in sin, evil is even my good.
Evil my innermost self, foolish, avoiding the pure,
Beast am I not, yet the ways of the beast I can never forsake.
I can exhort with strong words, telling men what they should hate,
Yet can I never give gifts, only to beg them I know.
Ah! wretched man that I am, whereunto came I to birth?

(தொடரும்)

ஈங்கோய் இலக்கியம்

திரு. கு. பழநிசாமி அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கல்லூரி, அருள்நந்தி நகர்.

—— o ——

புலியும் மானும்:

திருஈங்கோய்மலை எழுபதில் விலங்குகளைப் பற்றிய செய்திகள் நிறைய வருகின்றன. அவற்றுள் யானைகள், குரங்குகள் ஆகியவைகளைப்பற்றி முன்னைய கட்டுரைகளில் கண்டோம். இக்கட்டுரையில் மற்றும் சில விலங்குகளைப் பற்றி அறிந்து கொண்டு, மேல் அவற்றுடன் மனிதர்களின் செயல்களும் இணையவரும் அழகு நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பின்னர்க் காண்போம்.

புலியும் மானும் ஒரு துறையில் நீர் அருந்துவதும் கூடி உறைவதும், புராண, இதிகாச, நிகழ்ச்சிகள். ஒரு நாட்டின் நேர்மையினையும், நீதியினையும், மிகைப்படுத்திக் கூற வரும் போது நம்மவர்கள் அவ்வாறு சொல்வது வழக்கம். மனிதனின் கற்பனை சிறந்தது தான். புலியும் மானும் சேர்ந்து வாழ்வது நல்லதுதான். ஆனால் அந்தக் கற்பனைச் சமுதாயம் அமைவது தான் அரிதாக இருக்கின்றது. "எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே, இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ" என்ற அந்தப் பொருளாதாரச் சமநிலை கூட என்றுவது ஒரு நாள் வரமுடியுமா என்பதே ஐயமாக இருக்கின்றது. மனிதர்களே உள்ள ஒருமைப்பாடு இன்றித் தவிக்கின்ற இக்காலத்தில், ஒருவரை ஒருவர் ஏமாற்றியும் சுரண்டியும் வாழ்கின்ற இக்காலத்தில் சிந்திக்க இயலாத விலங்குகள் ஒத்து வாழ்வது எவ்வாறு? ஆனால் நமது பண்டைய புலவர்களின் கற்பனை நெஞ்சில் அவைகள் எப்படியோ ஒத்து வாழ்ந்திருக்கின்றன.

நக்கீரதேவர் ஈங்கோய் மலையில் கண்ட புலியும் மானும் கூட அதிகமாக முரண்பட்டதாகத் தெரியவில்லை; மான் கூட்டத்தைக் கண்ட புலி ஒன்றுமே செய்யவில்லை; ஆனாலும் இயற்கையிலேயே அச்ச உணர்ச்சியை உடைய மான்கள் நாலா பக்கமும் சிதறி ஒடுகின்றன. இதனை நக்கீரதேவர் அழகுற ஒரு பாட்டில் அமைக்கின்றார்.

தாமரை பூத்தவயல்கள்; இனிய மணம் பரவும் தனிமை மிக்கசூழல். தண்ணீரும் மென்னிலமும் அப்பகுதிக்கு அழகு சேர்க்கின்றன. செழிப்பான இடத்திலே மேய்ந்து திரியும் மான் களின் கூட்டம் கலையும், பிணையும், குட்டிகளுமாகச் சேர்ந்து உகளுகின்றன. மகிழ்ச்சிப் பெருக்கில் அவைகள் அங்குமிங்கும் துள்ளிவிளையாடும் போது அவற்றின் கால்களில் பட்டுத்தாமரை மலர்கள் நைந்து வாடுகின்றன. அப்படிக் கவலையற்றுத் திரிகின்றது மானின் கூட்டம்.

இன்பம் எப்போதுமே நிலையாக இருப்பதில்லை. துன்பம் உண்டு என்பதும் பலபோது நமக்கு நினைவு இருப்பதில்லை. "இன்பமுண்டேல் துன்பமுண்டு". இதுதான் இயற்கையின் நியதி. இன்பத்தோடு துள்ளித் திரிந்த மான்களுக்குத் துன்பம் ஒன்று காத்துக்கிடந்தது. எங்கிருந்தோ பாய்ந்தோடி வந்தது புலியொன்று. அச்சந்தரும் அதன் விழிகள். திமிரான அதன் உடல் அமைப்பு. இறுமாந்த தோற்றம். இவைகள் எல்லாம் மென்மையான அந்த மான்களுக்கு நம்பிக்கை யளிக்கவில்லை. புலி அவைகளை அடித்துண்ண வேண்டும் என்று வரவில்லை. அதுவந்த வழியில் மான்களின் கூட்டம் எதிர்ப்பட்டது, அவ் வளவுதான். ஆனால் மருட்சி நிறைந்த மான்களோ திக்குக்கு ஒன்றாக வெருண்டோடி மறைந்தன. புலியின் நோக்கம் மான் களைக் கொல்வதாக இல்லாவிட்டாலும் புலியின் நம்பமுடியாத தோற்றம் மான்களைச் சிதற அடிக்கின்றது என்கிறார்கவிஞர்.

தாமரையின்தாள் தகைத்த தாமரைகள் தாள்தகைய
தாமரையில் பாய்ந்துகளும் தண்புறவில்—தாமரையின்
ஈட்டம் புலிசிதறும் ஈங்கோயே எவ்வுயிர்க்கும்
வாட்டங்கள் தீர்ப்பான் மலை.

அனைத்துயிர்க்கும் அல்லல் அறுத்தருளும் ஆண்டவன் குன்றத்தின் காட்சியை இப்படிக் கூறுகின்றார் நக்கீரர்.

மண்ணும் விண்ணாகின்றது

கவிஞன் எல்லோரையும் போல ஒன்றைக் காண்பதில்லை. ஏதாவது ஓரழகு அல்லது அருமை வெளிப்படுமாறே அவனது காட்சி அமைந்து இடக்கும். சாதாரணப் பொருள்களிலும் சிறப்பினைக்காண்பதே சிறந்தது. இத்திறமெல்லாம் கைவரப்பெற்றவர் நக்கீரதேவர். அவர் இயற்கையின் அழகுத் தோற்றத்தில் அடிக்கடி உள்ளம் பறிகொடுத்து நிற்பார்.

ஒளி விளங்கும் மணிகள் நிறைந்தது ஈங்கோய்மலைச்சாரல். அவைகள் எங்கும் பரந்து கிடக்கின்றன. இவற்றிற்கு இடையில் காட்டுப்பன்றியின் வளைந்த மருப்பொன்று வெள்ளை வெளேரென்று விழுந்து கிடக்கின்றது. இக்காட்சி, பிறைநிலவு தவழும் நீல வானில் அதனைச் சுற்றி விண்மீன்கள் ஒளிவிடுவது போன்ற தொன்று என்கின்றார்.

கண்ணைக் கவரும் மணிகளுக்கிடையில் காணப்படும் ஏனத்தின் வளை மருப்புத் தோற்றம் ஈங்கோய் மலைப் பிரதேசத்தையே வான உலகமாக மாற்றிக் காட்டுகிறது கவிஞருக்கு. ஈங்கோய் மலைச்சாரல் வான உலகமாகக் காட்சி தருகிறது என்றால் அந்த வானுலகத்தில் வாழும் சோதி வானவன் விளங்குகின்ற இடம் ஒன்றும் காட்டுகின்றார். ஈங்கோய் மலைநாதர் திகழும் மலைக்கோயில்தான் அந்த இடம் என்கிறார். இப்படிக் கவிஞர் ஈங்கோய் மலைச்சாரலைக் கற்பனை கடந்த வானாகவும் கேழலின் மருப்பைக் கதிர் நிலவாகவும், காணப்படும் மணிகளைக் கண் சிமிட்டும் விண்மீன்களாகவும், வேதங்கள் புகழ் பாடும் அங்குள்ள இறைவன் வெற்பை அனைத்திற்கும் மூலகாரணமாக உள்ள முழு முதலாகவும் கொண்டு எல்லாவற்றின் மூலமும் இறைமையை அனுபவிப்பதை இப்பாட்டில் காணலாம். இப்படி மண்ணுலகினையும் விண்ணாக்கிக் காட்டும் அப்பாடல்,

கண்கொண் டவிர்மணியின் நாப்பண் கருங்கேழல்
வெண்கோடு வீழ்ந்த வியன்சாரல்—தண்கோ(டு)

இளம்பிறைசேர் வான்கடுக்கும் ஈங்கோயே வேதம்
விளம்புஇறைசேர் வான்கடுக்கும் வெற்பு.

சிங்கத்தின் சீற்றம்:

ஈங்கோய் மலை உயரம் மிக உடையது. மலையின் உச்சி, புதிர் நிறைந்த அதன் பகுதிகள் இவற்றின் அருமையைச் சொல்ல ஒருவர், குறவரும் மருளும் குன்று, என்று குறிப்பிடுகின்ருர். நக்கீரதேவரும் ஈங்கோய் மலையின் உயரத்தைக் கவிதை நயத்துடன் பல்வேறு முறையில் கூறியிருக்கின்ருர்.

மலையின் உச்சியில் ஏறி நின்று ஒரு கிழக் குரங்கு வானத்தில் உள்ள நிலவினைத் தடவியதாக ஓரிடத்தில் குறிப்பிடுகின்ருர்.

பிறிதொரு இடத்தில், பல்வேறு பழங்களைத்தின்ற மந்தியானது சுனைநீரைப் பருகுகின்றது. அப்பனிச்சுனைத் தெண்ணீரும் அதற்குத் தண்ணென்று இல்லை. எனவே மலைமுகட்டில் ஏறுகிறது. அம்முகடு மேகமண்டலம் வரை செல்கின்றதாகையால் அங்குள்ள மேகங்களில் இரண்டு துண்டைக் கீறித் தன் வாயில் போட்டுக் கொள்கிறது. பின்னர்தான் அதற்கு வேட்கை தணிகிறது. இவ்வாறு மலையின் உயர்ச்சியைக் காட்டுகின்ருர் கவிஞர்.

பின்வரும் பாடலில் வேறு ஒரு முறையில் மலையின் உயர்ச்சியைக் காட்டுவதுமட்டுமின்றி அருவி கொட்டுவதற்குக் கற்பனை விளங்கக் காரணமொன்றும் கூறுகின்ருர்.

மஞ்சு கண்துஞ்சும் மலை அது. வானைத்தொடச் செல்லும் அதன் முகட்டை உற்றுக் கவனிக்கின்ருர் புலவர். அங்கு ஏதோ ஒருருவம் நடமாடுகிறது. ஐயமில்லை அது ஒரு சிங்கந்தான். நிமிர்ந்து நிமிர்ந்து மேலே பார்த்துக்கொண்டு அங்கே உலவுவானேன். சற்று நேரத்திலேயே காரணம் புரிந்துவிட்டது. அதற்கு நீர்வேட்கை. மேகங்கள் வருகின்றனவா என்று பார்த்துக் கொண்டிருக்கிறது.

கார்மேகக் கூட்டம் ஒன்று விரைந்து வந்து மலையைத் தழுவுகின்றது. அங்கேயே தங்காமல் மீண்டும் சென்று விடும்போல் தெரிகிறது. சீற்றம் கலந்த ஒலி ஒன்று சிங்கத்திட மிருந்து எழுகின்றது. தனது கையால் மேகத்தை ஓங்கி அறை வது போன்று கீறுகிறது. அடிதாங்காத மேகம் தண்ணீராகிய குருதியைக் கொட்டுகிறது. சிங்கம் வயிறுர நீரை உண்டு மகிழ்கிறது. மிகுந்த தண்ணீர் அருவியாய்ப் பெருகிச் சமவெளி யில் பாய்கிறது. இவ்வாறு மலையருவி தோன்றுவதற்குரிய காரணத்தையும் மலையின் உயர்ச்சியையும் சுவைபடத் தெரி விக்கின்றது இப்பாடல்.

ஓடும் முகிலை உகிரால் இறஊன்றி
மாடுபுக வான்கை மிகமடுத்து—நீடருவி
மாச்சீயம் உண்டு மனங்களிக்கும் ஈங்கோயே
கோச்சீயம் காண்பரியான் குன்று.

இனி மனிதர்களையும் விலங்குகளையும் இணைத்துவரும் காட்சிகள் சிலவற்றை அடுத்துக் காண்போம்.

———

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் சிதம்பர இராமலிங்க சற்குரு புலம்பற்கண்ணி*

தொகுத்தவர், திரு. P. P. துரைசாமி அவர்கள்,
கோயமுத்தூர்.

[மலர் 14, இதழ் 9-ன் தொடர்ச்சி]

வஞ்சமிலார்க் குண்மைநெறி — வாய்க்கத் திருவருட்பா
நெஞ்சறி வுறுத்தல் — நிகழ்த்தியருள் சற்குருவே. 61

"உலகெலாம்" என்றற்(கு) — உரைவிரித்துச் சொற்றே
உலகில் பெரும்புகழை — உற்றவென்றன் சற்குருவே. 62

அடுத்தசட துக்கவுடல் — ஆமெனும் அப்போதம்
அநித்தமாம் என்றே — அருளியவென் சற்குருவே. 63

அருளும் பரையும் — அடிநடுவே யாகும்
பொருளும் சிவமுடியாம் — போதமருள் சற்குருவே. 64

அண்டபிண்டம் தோன்றிட — அடங்கு முறைமைநிலை
விண்ட பெருங்கருணை — வித்தகவென் சற்குருவே. 65

அகமும் அகப்புறமும் — ஆன்மாவும் சீவன்
தகவும் தெரிந்தருளும் — தற்பரனும் சற்குருவே. 66

புறப்புறமும் புறமும் — பொய்மெய் கரணம்
உறப்பெற்ற வுண்மை — உரைத்தருளும் சற்குருவே. 67

ஆவி ஈரைந்தை — அபரம் தனில்வைத்து
நாவினால் ஓத — நவின்றருளும் சற்குருவே. 68

இறப்பும் பிறப்பும் — இரியவரும் வீட்டின்
திறப்பும் புகவும் — தெரிந்தருளும் சற்குருவே. 69

கண்புருவப் பூட்டின் — கதவைத் திறப்பதற்கே
நண்புவைத்தோர் கவியின் — நாட்டியவென் சற்குருவே. 70

(தொடரும்)

*திரு. ச. மு. கந்தசாமி பிள்ளை யவர்கள் இயற்றியது.

சுப்பிரமணியர் விருத்தம்

[மலர் 14. இதழ் 9-ன் தொடர்ச்சி]

நாரதப் பிரமாதி அமரர்கின்னரர் உரகர்
நாரணன் முதல்பண்ணவர்
நடுக்கம் பொருந்திய இடுக்கண் களைந்திட
நடக்கும் குழந்தைவயதில்
சூரபத் மாசுரன் கயமுகன் தாருகன்
துன்முகன் பானுகோபன்
துட்டகிர சக்ரசஞ் சரசுரன் சிங்கனெடு
சுற்றிய அரக்கரையெலாம்
கோர சங்கார ரணதூளி படலம்கொண்டு
கூருடி உனது வெற்றிக்
கொடியேற இந்திரன்மணி முடிஏற வானுடு
குடியேற வைத்ததுரையே
தாரணியின் மேவுபரிபூரண உல்லாசனே
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 5

சீலமிகு தற்பரனை உன்னித்த தேகத்
தியானத் தெழுந்துபொங்கிச்
சில்லென்று மெய்ம்மறந் தானந்த மவுனம்
செனிக்கக் குவிந்துகண்ணீர்
ஆலிபொழி யக்கருணை உள்ளம் கனிந்துருக
அன்புருக என்புருகவே
அங்கம் குழைந்துபுள கிக்கநின் றுருகுவார்
அப்படியும் என்றறிவனோ

காலங் கழித்துண்டு வீணுக் கலந்துபல
காலப்பிர பஞ்சமாயக்
கடற்குள் படிந்தே கிடக்கின்ற பாசம்
கடக்கும் படிக்கருளுவாய்
தாலமுழு துண்டுநிலை கண்டகோ தண்டமால்
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 6

கல்லால் எறிந்தும்முன் எச்சிலைத் தந்துபின்
கண்ணைப் பறித்துவைத்தும்
கருதுவசை சொல்லியும் செய்சிறு மைந்தனைக்
கறிசமைத் தூணமைத்தும்
வில்லால் அடித்தும்ஓர் பாயலில் தன்னுடைய
விரதம் செலுத்துவித்தும்
வேலையில் தூணோடு சுழன்றும் பிரானுக்கு
மெய்யன்பன் எனநடந்தும்
நல்லார் எனப்பேறு பெற்றூர்கள் அதுபண்டை
நாள்செய்த பூசைஈசன்
நன்கிருபை யாமெனக் குன்கிருபை யல்லாது
நாடுவது வேறுமுளதோ
சல்லாப உல்லாச வில்லேறு வல்லாள
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 7

அற்புத மிகப்புகழ் திருப்புகழ் விருப்பொடுசொல்
அருணகிரி தனையுகந்தாய்
அம்புவியில் இன்பமுறு கும்பமுனி முன்புவர
அன்புருகு பண்புரைத்தாய்
உற்பன அரக்கனொடு சர்ப்பன மனப்பயம்
உற்றநக் கீரனொருநாள்
உன்சலிகை தஞ்சமென நெஞ்சுருக வஞ்சகிர
வுஞ்சநேர் கிரிபிளந்தாய்

எப்படியும் முற்படு வினைப்பயன் உலப்பும்அதை
இப்புவியி லேமறுப்பாய்
ஈதுகலி காலமென் றெண்ணவொண் ணாதுநான்
ஏழையடியேன் ஆகையால்
தற்பர தயாபர மனோரதம் மகிழ்ந்துதவு
சரச கோபாலன் மருகா
சதுர்மறைகளே தந்த பரமகுருவாய் வந்த
சரவண பவானந்தனே. 8

(தொடரும்)

தாயுமானவரின் – பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

3

Our Poet–Saint, in his ecstasy addresses the Lord by various attributes. He describes the Lord as his eyes, mind and so on. He says that God is his mind and eyes. Thus he surrenders his 'Self' absolutely before the Omnipotent–a realisation possible only in the ego–free hearts. Our Poet further adores the limitless grace of God in this couplet too.

கண்ணே! கருத்தே! என்கற்பகமே! கண்ணிறைந்த
விண்ணே! ஆனந்த வியப்பே! பராபரமே!

(பொ–உரை) பகிர்முக விஷயங்களைக் கிரகிக்கும் நேத்திரமே அந்தர்முக விஷயங்களைக் கிரகிக்கும் மனமே! விரும்பினவற்றைத் தந்தருளும் கற்பக விருட்சமே! தரிசிக்கத் தகுந்த சிதாகாயமே! ஆனந்த முதவும் ஆச்சரியப் பொருளே!

Oh........Lord Supreme! you are my eyes through which I see. You are my mind the source of all my thoughts. You are the divine Karpaka tree giving me all I desire. You are the all pervading pure knowledge perceptible every where and yet you are a wonder and indescribable Bliss.

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Arts College, Arulnandi Nagar.

சிவ சிவ

திருநள்ளாற்றில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு நிதி ரூ. 5000/-

" வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே"

என்று ஞானசம்பந்தர் அருளியவாறு நளன் பூசித்துக் கலி நீங்கப் பெற்ற தலமாயதும்,

" கடல்நாகை நள்ளாறு காருயல் கோளரியூர்
மடளுக முத்தீனும் வாய்மியூர் மறைக்கானம்."

என்று கந்தபுராணத்தில் கண்டவண்ணம் முசுகுந்தச் சக்கர வர்த்தி எழுந்தருளுவித்த சப்த விடங்கத் தலங்களுள் ஒன்றாயதும்,

திருஞானசம்பந்தர் மதுரையில் அனல் வாதத்தில் இட்டுப் பச்சைத் திருப்பதிகம் ஆக விளங்கிய 'போகமார்த்த' என்ற பதிகம் தோன்றிய பதியாயதும்,

'பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம்' என்றருளிய காரைக்கால் அம்மையார் தோன்றியதலமாகிய காரைக்காலுக்கு அண்மையிலுள்ளதும்,

" காரணக் கலை ஞானக் கடவுளே,
வக்க ரன்னுயிர் வவ்விய மாயற்குச்
சக்க ரம்மருள் செய்த சதுரரே,

'செல்லநல்ல சிவலோக நெறிவகுத்துக் காட்டுவானை'

' தயாமூல தன்ம மென்னும் தத்துவத்தின் வழிநின்று
தாழ்ந்தோர்க் கெல்லாம் நலம்கொடுக்கும் நம்பியை"

என்றின்னோரன்னவாறு திருமுறைகளில் துதிக்கப் பெற்ற தர்ப் பாரண்யேசுவரர் கோயில் கொண்டருளிய சேத்திரமாயதும்,

சனிப் பெயர்ச்சி விழாவில் மக்கள் திரளாகக் கூடி நள தீர்த்தத்தில் எண்ணெய் முழுக்காடி எள் முட்டைகட்டி எண்ணெய் விளக்கேற்றிச் சனி பகவானை வழிபாடு செய்து

வரும் வழக்காறுடையதும் ஆன திருநள்ளாறு எனும் தலத்தில், ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் சிவப்பேறெய்திய வைகாசி அமர பட்சம் திருதியைநாளில் ஆண்டுதோறும் அந்தணர், அருந்தவர் ஏழைகளுக்கு அன்னம்பாலித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இத்தருமம் நிறுவப்பெற்றது. இது 'திருநள்ளாற்றில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு நிதி' எனப் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000/- (ரூபா ஐயாயிரம்) இது ஆண்டொன்றுக்கு 3% வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்யப் பெற்றுள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சர்க்கார் கடன் பத்திரம் எண் சிஏ. 240195 ரூ. 5000/-. இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப் பெற்று வரும்.

3. இம்முதற் பொருளினின்று கிடைக்கும் வட்டித்தொகையில் இத்தருமத்தை நடத்துவதற்குரிய செலவு போக எஞ்சிய தொகை முழுவதும், ஆண்டுதோறும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சிவப்பேறெய்திய வைகாசி அமரபட்சம் திருதியைநாளில், திருநள்ளாற்றில் அந்தணர், அருந்தவர், ஏழைகளுக்கு அன்னமளித்தற் பொருட்டுச் செலவு செய்யப் பெறும்.

4. ஆண்டு தோறும் கிடைக்கும் வட்டி வரவுக்கேற்பவும் காலவிலைக்கேற்பவும் நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம் பாலிப்பு நடத்தப்பெற்றுவரும்.

5. இவ்வருமானம் வேறு எந்த முறையிலும் செலவு செய்யப்பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும். இம்முதற் பொருள் அரசினரால் திரும்பியளிக்கப்பெறின் அதிக வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் மீண்டும் முதலீடு செய்யப் பெறும்.

திருப்பனந்தாள்,
15-3-1963.

(Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's office on 16-3-1963 as No. 17 of 1963 of Book 4 volume 50, pages 155 to 157.

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
9965 to 72	சிதம்பர விலாசம் (குறிப்புரையுடன்)	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
9973 to 80	ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் வரலாறு	தருமபுர ஆதீனம்.
9981 to 83	திருமயிலாடுதுறை தேவாரத் திருப்பதிகங்கள் (குறிப்புரையுடன்)	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
9984 to 93	திருநள்ளாற்றுத் திருப்பதிகங்கள்	ஷை
9994 to 10,003	ஆத்திச்சூடித் திறவுகோல்	ஷை
10,004 to 10,008	திருப்பாவை – கருத்துரையுடன்	திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார், தமிழாசிரியர், திருச்சிராப்பள்ளி.
10,009 to '17	திருவாசகப் பழமொழிகள் G. U. போப் (ஆங்கிலமும் கூடியது)	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
10,018 to '25	சிவபுராணமும் திருப்பல்லாண்டும்	ஷை
10,026 to '31	மதுரைத் திருமுறைத்திரட்டு	ஷை
10,032 to '40	விநாயகர் அகவல்	ஷை
10,041 to '50	திருப்பூந்துருத்தித் தேவாரத் திரட்டு	ஷை
10,051 to '60	திருவண்ணுமலைத் தேவாரத்திருப்பதிகங்கள் (குறிப்புரையுடன்)	ஷை

10,061 to '70	திருக்கேதாரத் திருப்பனுவல்கள்	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
10,071 to '75	திருவானைக்காத்திருப்பனுவல்கள்	ஷ
10,076 to '85	திருத்தென்குரங்காடுதுறைத் திருப்பனுவல்கள்	M. N. முத்தையஞ் செட்டியார், ஆடுதுறை.
10,086 to '96	திருநாரையூர் நம்பி திருப்பனுவல்கள்	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
10,097 to '106	சிவபோகசாரம் (இலவச வெளியீடு)	ஷ
10,107 to '116	திருவண்ணாமலைத் திருப்பனுவல்கள்	ஷ
10,117 to '25	திருப்பல்லாண்டு	திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார், தமிழாசிரியர் திருச்சிராப்பள்ளி.
10.126 to '35	நீதிநெறிவிளக்கம் (மூலம்)	ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.
10,136 to '46	ஷ மூலமும் உரையும் ஆங்கிலத்துடன்	ஷ
10,147 to '56	அம்மையார் அற்புதத் திருவந்தாதி	ஏவிளம்பி விசயதசமி வெளியீடு, ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம்.
10,157 to '58	பினோஷியோ (ஒருமரப்பாவையின் கதை) முதற்புத்தகம்	மூலஆசிரியர் "கல்லோடி" தமிழாக்கம். ஜி. ராமசுப்பிரமணிய அய்யர், அம்பாசமுத்திரம்.
10159 & '60	பினோஷியோ இரண்டாம் புத்தகம்	ஷ
10161 & '62	ஷ 3ம் புத்தகம்	ஷ
10163 & '64	ஷ 4ம் புத்தகம்	ஷ
10165 to '69	திருவாரூர்த் திருப்பனுவல்கள்	ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம்.

(தொடரும்)

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

			ரூ. ந. பை
1	விநாயகர் திருமுறை	...	0 06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும் புதிய பதிப்பு)	...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,, ,,	...	2 00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1 30
7*	திருவாசகம் ,,	...	0 56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும் (புதிய பதிப்பு)	...	2 90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்)	...	0 56
10*	திருமந்திரம் ,, (புதிய பதிப்பு)	...	2 25
11*	பதினோராந்திருமுறை ,, ,,	...	1 50
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0 25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன்	...	0 50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்) (அச்சில்)		
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	...	0 37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	...	3 00
17	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)	...	1 75
18	கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள் ,,	...	2 75
19	,, யுத்த தேவகாண்டம் ,,	...	2 00
20	,, தக்ஷகாண்டம் ,,	...	1 50
21	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன்	...	0 25
22	கந்தரநுபூதி	...	0 13
23	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	...	0 37
24	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்	...	0 10
25	கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும்	...	0 37
26	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0 50
27	சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0 06
28	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1 50
29	திருக்குறள் – பொருட்பால் ,,	...	2 50
30	திருக்குறள் – காமத்துப்பால் ,,	...	1 00
	ஷை 28. 29. 30 திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
31	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0 75
32	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13

Under No. R. No. 1485/57.
Regd No. M. 5574 குமரகுருபரன்.

33	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
34	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
35	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை- மதுரை மீனுட்சியம்மை குறம்	...	2 75
36	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	...	1 25
37	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை- தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
38	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை	...	1 00
39	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
40	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
41	பெரியபுராணம் – உரைநடை	...	2 00
42	திருவிளையாடற் புராணம் – உரைநடை	...	2 25
43	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 50
44	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
45	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
46	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
47	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
48	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
49	ஷை ஷை காமத்துப்பால் ஷை	...	1 20
50	அபிராமி அந்தாதி – தெளிவுரையுடன்	...	0 50
51	மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50
52	கந்தரனுபூதி-தெளிவுரையுடன்	...	0 35
53	திருவாரூர்-திருப்பதுவல்கள்	...	0 10
54	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
55	பழமொழித்திருமுறை	...	0 25
56	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"ஷெகாரு விலாசம்" 53, பிள்ளையார் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 47, 48, 49) தவிர்த்த எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '63.